வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 29.09.2021 புதன்கிழமை | இதழ் : 298 | பக்கங்கள் : 16

# திருமலையில் முன்னாள் போராளி ஆயுத முனையில் கடத்தப்பட்டார்!

## பொலிஸார் என்று அடையாளப்படுத்தியே கடத்தல்

திருமலை, செப். 29

திருகோணமலை மாவட்டம் வரோதயநகரில் முன்னாள் போராளி ஒருவர் ஆயுதம் தாங்கிய குழு ஒன்றினால் நேற்று அதிகாலை கடத்திச் செல்லப்பட்டுள்ளாரென மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

39 வயதுடைய மனோகரதாஸ் சுபாஸ் என்பவர் திருகோணமலை வரோதயநகரில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் வைத்து வாகனத்தில் வந்த ஆயுதம் தாங்கிய நபர்களால் பிடித்து செல்லப்பட்டார்.

தம்மை பொலிஸார் என்று அடையாளப்படுத்திய நபர்கள் அவரை விசாரணைக்கு எனத் தெரிவித்து பிடித்துச் சென்றுள்ளனர்.

உப்புவெளி பொலிஸ் நிலை 15

எம்.பி. பதவியை துறந்து

## மாகாணசபை செல்ல தயாராகிறார் தயாசிறி

கொழும்பு, செப். 29

கட்சி கோரிக்கை விடுக்கும்பட்சத்தில் வடமேல் மாகாணசபை முதல்வர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன் என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். 15

## கொரோனா தொற்றால் மேலும் 55 பேர் மரணம்!

கொழும்பு, செப். 29

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 55 பேர் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் 15

## நேற்றும் 1,000 இற்கும் குறைந்த தொற்றாளர்

கொழும்பு, செப். 29

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 932 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். 15

## தமிழருக்கு நிரந்தர தீர்வே தேவை

# ஜி. எஸ். பி. பிளஸ் வரி சலுகை இலங்கைக்கு வழங்காதீர்கள்!

### ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் தமிழ் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்து



கொழும்பு, செப்ரெம்பர் 29

“இலங்கையின் தரநிலை மேம்படாத நிலையில், ஜி. எஸ். பி. பிளஸ் சலுகையை வழங்கக்கூடாது. மீறி இந்த சலுகை வழங்கப்பட்டால் அது சிறுபான்மையினரை ஒடுக்கும் அரசாங்கத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தாது”, இவ்வாறு தம்மை சந்தித்த ஐரோப்பிய ஒன்றிய குழுவிடம் கோரியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. 15

## இந்திய உயர் ஸ்தானிகருடன் பிரதமர் பேச்சு



கொழும்பு, செப். 29

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை சந்தித்து விரிவான பேச்சுகளை நடத்தியுள்ளார். அலரி மாளிகையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரு தரப்பு விடயங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் ருவிட்டரில் குறிப் 15

## அரசின் பங்காளி கட்சிகள் தாராளமாக வெளியேறலாம்!

### பிரதமர் மஹிந்த அறிவிப்பு

கொழும்பு, செப். 29

தற்போதைய அரசாங்கத்தில் உள்ள பங்காளிக் கட்சிகளுக்கு அரசாங்கத்திலிருந்து வெளியேறிச் செல்ல வேண்டுமென்ற திட்டங்கள் இருக்குமாயின், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசிலிருந்து வெளியேறலாம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சிங்கள ஊடமொன்று வெளியிட்ட செய்தியில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு வெளியேற நினைக்கும் கட்சிகளை 15



## இப்படியும் நடக்கிறது...!

இந்தியாவின் நகரம் ஒன்றில் இருந்த மதுபானசாலை ஒன்றில் ஓர் அமெரிக்கர் நுழைந்தார்.

“நிறுத்தாமல் அடுத்தடுத்துப் பத்துப் போத்தல்கள் பியரைக் குடிப்பவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு. போட்டியில் தோற்றால் நீங்கள் எனக்கு பத்தாயிரம் ரூபாய் தர வேண்டும். சவாலுக்குத் தயாரா?”, என்று அறிவித்தார்.

யாரும் அசையவில்லை. ஒருவர் மட்டும் எழுந்து அவசரமாக வெளியே போனார். இருபது நிமிடம் கழித்துத் திரும்பி வந்தார்.

“பந்தயத்துக்கு நான் தயார்” என்றார்.

அடுத்தடுத்து பத்து பியர் போத்தல்களை அவர் காலி செய்து முடித்ததைப் பார்த்து, அமெரிக்கர் வியந்து போனார். சொன்னபடி பரிசுத் தொகையைக் கொடுத்துவிட்டு,

“ஆமாம், எதற்காக முதலில் எழுந்து வெளியே போனீர்கள்?” என்று கேட்டார்.

“பந்தயத்தில் என்னால் ஜெயிக்க முடிகிறதா என்று பக்கத்தில் உள்ள வேறொரு மதுபானசாலைக்குச் சென்று பத்துப் போத்தல் பியரைக் குடித்துப் பார்த்தேன்”, என்றார் அவர்.

“எங்களுக்கும் வரலாறு இருக்கின்றது. அதனை நாம் கூற முடியும். ஆனால், எங்கள் மக்கள் பாரிய அழுத்தங்களுக்குள் வாழ்ந்து கொண்டிருகிறார்கள். எங்களுக்குள் ஒற்றுமை இல்லை எனக்காட்டினால் மக்கள் மனமுடைந்து மிகவும் மோசமான நிலைக்கு செல்வார்கள்”, இவ்வாறு திருவாய் மலர்ந்திருப்பவர் நமது ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன்.

இவர் இவ்வாறு தெரிவித்த அதே நாளில்தான் அவரின் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனா என்ற கோவிந்தம் கருணாகரன், “தமிழ்த் தேசியப் பரப்பில் செயல்படும் அனைவரும் சரியான தீர்மானம் எடுக்கும் சந்தியில் நிற்கின்றோம். தற்போதைய ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் இலங்கை பாதுகாப்புத் தரப்பின் செயல்பாடுகள் அதற்கேற்ற வகையிலேயே இருக்கின்றன. அதனைச் சரியாகப் பயன்படுத்துவது எமது கரங்களிலேயே உள்ளது” என்று தெரிவித்திருக்கிறார்.

எங்களுக்கும் வரலாறு இருக்கிறது என்று எதைச் சொல்கிறார் செல்வம் என்பது தெரியவில்லை. சிறி சபாரத்தினத்திற்கு முந்தைய வரலாற்றைச் சொல்கிறாரா? அல்லது கடந்த சில வருடங்களாக கூட்டமைப்பிற்குள் இருந்து கொண்டு அவ்வப்போது அவர் விடுத்துவரும் அறிவிப்புக்களை வரலாறு என்று சொல்கிறாரா என்பது தெரியவில்லை.

கூட்டமைப்பில் இருந்துகொண்டே, கூட்டமைப்புக்கு போட்டியாக அரசியல் நடத்தும் மற்றைய கட்சிகளுடன் சேர்ந்து ஜெனிவாவிற்கு கடிதம் எழுதுகின்றபோது, எங்களுக்குள் ஒற்றுமை இல்லை என்பதை காட்டவில்லை என்கிறாரா என்றும் கேட்காமல் இருக்க முடியவில்லை.

அதைவிட, மக்கள் மனமுடைந்து மிகவும் மேசமான நிலைக்கு சென்றுவிடுவார்கள் என்பதற்காகத்தான் அமைதியாக இருக்கிறராம்.

கூட்டமைப்பின் பேச்சாளராக உங்களை நியமிக்கக் கேட்டீர்கள். அதற்கு பெருந்தலைவர் சம்பந்தன் ஐயா சம்மதம் தெரிவித்தாரெனவும் சொன்னீர்கள். ஆனால், இன்றுவரை உங்களை நியமிக்க தமிழ் அரசு இணங்கவில்லை. நீங்கள் பொறுமையாக இருப்பது தமிழ் மக்கள் மனமுடைந்து விடுவார்கள் என்பதற்காகத்தானே?

இந்த அரசாங்கம் கூட்டமைப்பை பேச்சு நடத்த அழைத்தால் போவதற்கு நாங்கள் என்ன அவர்களின் கைப்பிள்ளைகளா என்று நீங்கள் கேட்ட பின்னரும், கூட்டமைப்பு சார்பில் சுமந்திரன் பேச்சு நடத்திய பின்னரும் நீங்கள் அமைதியாக இருப்பது தமிழ் மக்கள் மனமுடைந்து விடுவார்கள் என்றுதானே?

நல்லாட்சி அரசு காலத்தில், கூட்டமைப்பிற்கு கிடைத்த தேசியப் பட்டியல் இரண்டில், ஒன்றில் சாந்தினி சிறீஸ்கந்தராசா இரண்டரை ஆண்டுகளும், ரெலோவுக்கு இரண்டரை ஆண்டுகளும் வழங்கப்படும் என்று சொன்ன கூட்டமைப்பு தலைமை, உங்களுக்கு அந்த இரண்டரை ஆண்டு கால நியமனத்தை வழங்கியிருந்தால், சிறீகாந்தா இன்றும் உங்களோடு இருந்திருப்பார். ஆனால், நீங்கள் அதனைக் கேட்டுப் போராடாமல் விட்டது தமிழ்மக்கள் மனமுடைந்துவிடுவார்கள் என்பதால்தானே?

அதுசரி, தமிழ்த் தேசியப் பரப்பில் செயல்படும் அனைவரும் சரியான முடிவெடுக்கும் சந்தியில் நிற்கிறோம் என்று உங்கள் கட்சியின் செயலாளர் கூறியிருப்பது, எந்தச் சந்தி என்பதையாவது கேட்டு தமிழ் மக்களுக்கு சொன்னால் அவர்களும் அறிந்துகொள்வார்கள்தானே.!

- ஊர்க்குருவி

# சுருக்கு வலையை பயன்படுத்தி மீன்பிடித்த 15 பேர் மடக்கிபிடிப்பு!

வடமராட்சி, செப். 29

அனுமதி அற்ற சுருக்குவலையை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட ஐந்து படகுகள் மற்றும் 15 மீனவர்களை வடமராட்சி பகுதி மீனவர்கள் சுற்றிவளைத்து பிடித்து நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

வடமராட்சி கடற்பரப்பில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் விதமாக அனுமதிக்கப்படாத சுருக்கு வலைத் தொழிலால் உள்ளூர் மீனவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.

இந்தநிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை வடமராட்சி வடக்கு பருத்தித்துறை கடற்பரப்பில் அனுமதிக்கப்படாத இரண்டேகால் அங்குல கண் சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வெளி மாவட்டத்தை சேர்ந்த ஐந்து படகுகளை சுற்றிவளைத்த உள்ளூர் மீனவர்கள், அவ்வாறு மீன்பிடித்த 15 மீனவர்களையும் மடக்கிப் பிடித்தனர்.

அத்துடன், மடக்கிப்பிடித்த 15 மீனவர்களையும் 5 படகுகள், சுருக்கு வலைகளுடன் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். (ஐ - 02)

## வடக்கில் நேற்று 31 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், செப். 29

வடக்கு மாகாணத்தில் நேற்றைய தினம் 31 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனையின் ஆய்வகத்தில் 186 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இந்த முடிவின் பிரகாரம்,

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 9 பேரும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 4 பேரும், யாழ்ப்பாணம் மாநகர மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவரும், பலாலி விமானப் படை முகாமில் ஒருவருமாக யாழ். மாவட்டத்தில் 17 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேர், வவுனியா பொது மருத்துவமனையில் ஒருவர், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒருவர், இரணைமடு விமாப்படை முகாமில் 4 பேர், முல் லைத்தீவு பொது மருத்துவமனையில் இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ஐ)

## பிள்ளைகள் கைவிட்ட தாயை பொறுப்பேற்றது தியாகி நிறுவனம்!

யாழ்ப்பாணம், செப். 29

பிள்ளைகளால் பராமரிக்க முடியாமல்போன நான்கு பிள்ளைகளின் 82 வயது தாயாரின் பராமரிப்பு செலவுகளை தியாகி அறக்கட்டளை நிறுவுநர் ஏற்றுள்ளார்.

கடந்த இரண்டுநாட்களுக்கு முன் வவுனியாவில் இருந்து தனது பிள்ளைகள் வாழும் மல்லாகத்துக்கு வந்த தாயாரை பிள்ளைகள் ஏற்கமறுத்துள்ளனர். இதனால், அவர் வீதியோரத்தில் இருந்துள்ளார்.

பிள்ளைகளுடன் அவரை சேர்க்க அதிகாரிகள் எடுத்த முயற்சியும் பலனளிக்கவில்லை. இது தொடர்பில் தியாகி அறக்கட்டளை நிறுவுநருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் அந்த அந்த தாயாரின் முழுச் செலவையும் பொறுப்பேற்று தனியார் முதியோர் இல்லத்தில் சேர்ப்பித்துள்ளார்.

### கல்வி TV CHANNEL-1

**29.09.2021**

**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி TV CHANNEL - 2

**29.09.2021**

**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
29.09.2021 புதன்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# இளைஞர்களுக்கான அழைப்பு?

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன், இளைஞர்கள் அறிவை ஆயுதமாக்கி செயல்பட வேண்டுமென்றும், இளைஞர்கள்தான் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரங்கள் என்றும் தெரிவித்திருக்கின்றார். விக்னேஸ்வரனின் இந்த கருத்தானது, 1980களுக்கு முற்பட்ட காலத்தில், அப்போதிருந்த தமிழ் மிதவாத தலைவர்கள் பேசிய பேச்சுக்களை நினைவுபடுத்துகின்றது.

அன்றைய சூழலில் இயங்கிய தமிழ் தலைவர்கள் பலரின் மேடைப் பேச்சுக்கள் இளைஞர்களை கவர்ந்திழுக்கும் காந்த வார்த்தைகளாக இருந்தன. அவ்வாறான பேச்சுக்களால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் பலர் அன்றைய தமிழ் தலைவர்களின் தொண்டர்களாக மாறியிருந்தனர். பிற்காலங்களில் ஆயுத விடுதலை இயக்கங்களின் ஆரம்ப கர்த்தாக்களாக இருந்த பல முன்னணி இளைஞர்கள் அனைவருமே - ஆரம்பத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றினால் ஈர்க்கப்பட்டவர்களே!

தமிழ் மிதவாத தலைவர்களின் அனல்தெறிக்கும் பேச்சுக்களை நம்பித்தான், பல இளைஞர்கள் தமிழ்த் தேசிய உணர்வாளர்களாக உருமாறினர். ஆனால், ஒரு கட்டத்திற்கு பின்னர், தங்களால் போற்றப்பட்ட மிதவாத தலைவர்களுக்கு எதிராகவே அவர்கள் திரும்பினர். மிதவாத தலைவர்கள் தேர்தல் மேடைகளில் கூறியவை அனைத்தையும் அன்றையகால இளைஞர்கள் உண்மையென்று நம்பியதே இதற்கான காரணம். ஆனால், வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றியவர்களே பின்னர் அதனை கைவிட்டு செல்ல முற்பட்டபோது இளைஞர்கள் ஆவேசமடைந்தனர். இந்த ஆவேசத்தை ஆயுதங்கள் மூலமாகத் தீர்த்துக் கொள்ள முற்பட்டபோதுதான் பல கொலைகள் இடம்பெற்றன.

இந்த அனுபவங்கள் ஒரு விடயத்தை தெளிவாக எடுத்துரைக்கின்றன. அதாவது, இளைஞர்களை, தங்களின் அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்ள முற்படுவது, ஓர் ஆபத்தான ஆட்டமாகும். அந்த ஆட்டம் எந்த வேளைகளிலும், ஆட்டத்தை ஆரம்பித்தவர்களுக்கே எதிராக திரும்பலாம்.

2009 இற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இளைஞர்களின் இடம் என்பது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. இன்று தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் எந்தவொரு கட்சியிலும் வலுவான இளைஞர் கட்டமைப்புக்கள் இல்லை. வெறுமனே தேர்தல் காலத்தில், பிரசாரங்களுக்காக மட்டுமே இளைஞர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

தேர்தல் அரசியலில் இளைஞர்களுக்கென பிரத்தியேகமான இடங்கள் வழாங்கப்படுவதில்லை. ஓய்வூதியம் பெற்றவர்களுக்கே தேர்தல்களில் முன்னுரிமையளிக்கப்படுகின்றது. பாராளுமன்ற தேர்தலைப் பொறுத்த வரையில் முன்னர் தோல்வியடைந்தவர்களுக்கே முன்னுரிமையளிக்கப்படுகின்றது. இன்றிருக்கும் எந்தவொரு கட்சியும் இரண்டு முறை தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவருக்கு இடமில்லை அல்லது முன்னுரிமை வழங்கப்பட மாட்டாது என்னும் ஒழுக்கக் கோவையை கொண்டிருக்கவில்லை. பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களே பின்னர், மாகாண சபை தேர்தலில் நிறுத்தப்படுகின்றனர். அவ்வாறானவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. விக்னேஸ்வரனின் கட்சி இதில் விதிவிலக்கான ஒன்றாக இருக்கின்றதா? இன்றிருக்கும் தமிழ் தேசிய அரசியல் எப்படிப்பட்டது என்றால், தீர்மானங்கள் அனைத்தையும் நாங்கள் எடுப்போம், இளைஞர்கள் எங்களுடைய தீர்மானத்திற்காகப் பணியாற்ற வேண்டும். இந்த நிலையில் இளைஞர்கள் எவ்வாறு தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரங்களாக இருக்க முடியும்?

இளைஞர்களை நோக்கி அழைப்பு விடுக்கும்போது விக்னேஸ்வரன் இந்த விடயங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஆகக் குறைந்தது இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கும் விக்னேஸ்வரனாவது, இந்த விடயங்களை கருத்தில் கொண்டு, தேர்தல்களில் அரைவாசி இடம் இளைஞர்களுக்கு என்னும் தேர்தல் கொள்கை நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். எடுப்பாரா?

## நோர்வேயிலிருந்து சமரச முஸ்தீபு :

# இம்முறை துப்பாக்கிதாரியிடமிருந்து தப்பி நீந்தி உயிர் பிழைத்த ஹம்ஷாயினி குணரத்தினம்!

- அலசுவது இராஜதந்திரி -



இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நோர்வே பாராளுமன்ற உறுப்பினர் ஹம்ஷாயினி குணரத்தினம் இலங்கையில் இன ரீதியான நல்லிணக்கத்துக்கான சமரச முயற்சிகளில் பங்கேற்று உதவுவதற்கு தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

நோர்வே பாராளுமன்ற உறுப்பினராக அந்த நாட்டின் தொழில் கட்சி சார்பாக தெரிவாகியுள்ள ஹம்ஷாயினி குணரத்தினம் இலங்கை இனப்பிரச்னைக்கான தீர்வு முயற்சிகளில் ஈடுபட தமது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ள அதேசமயம், இலங்கையில் இடம்பெற்றவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ள யுத்தக் குற்றங்கள் சம்பந்தமாக சர்வதேச பொறிமுறையின் கீழ் விசாரணைகள் இடம்பெற வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

நோர்வே, இலங்கையில் இனப்பிரச்னைத் தீர்வு முயற்சிகளில் 2002ஆம் ஆண்டில் ஈடுபட்டிருந்தது. அச்சமயம் நோர்வேயின் சமரச அனுசரணையாளராக அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே அப்போதைய நோர்வே பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எரிக் சொல்ஹெய்ம் பங்களிப்பை வழங்கியிருந்தார்.

நோர்வே முன்னெடுத்த சமரச முயற்சி இலங்கைக்கு வெளியே பல்வேறு நாடுகளிலும் இடம்பெற்றிருந்தது. பெரும் பொருட்செலவோடு, நோர்வேக்கு அனுசரணையாக பல்வேறு நாடுகள் சமரச முயற்சிகளில் ஈடுபட்டிருந்தபோதிலும் அந்த சமரச முயற்சி வெற்றிபெறவில்லை.

நோர்வேயின் சமரச முயற்சி தோல்வியில் முடிவடைந்ததையடுத்து, வடக்கு - கிழக்கு மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் எண்ணிலடங்காதவையாக இருந்தன. ஆயுதப் போராட்டம் தோல்வியைத் தழுவிய நிலையில், விரிவான அரசியல் அணுகுமுறையே நிரந்தரத்தீர்வுக்கு வழிவகுக்கும் என்பதை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், கடந்த வாரம் ஜனாதிபதி கோடடாபய ராஜபக்ஷ நியூயோர்க்கில் வைத்து புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களையும் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களில் பங்கேற்க முன்வருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவ்வேண்டுகோளை புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் வரவேற்றுமிருந்தன. இந்நிலையில் நோர்வே பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் 30 வயதான இலங்கையை பூர்வீகமாக கொண்ட ஹம்ஷாயினி குணரத்தினம் சமரச முயற்சிகளுக்கு தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் பிறந்து மூன்று வயதில் நோர்வேக்கு புலம்பெயர்ந்து சென்ற குடும்பத்தைச் சேர்ந்தவரே ஹம்ஷாயினி குணரத்தினம். நோர்வே பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஹம்ஷாயினி, நோர்வே தலைநகர் ஒஸ்லோவின் பிரதி மேயராகவும் பணியாற்றியிருந்தார்.

ஹம்ஷாயினி மூன்று வயதில் அகதிகளாக புலம்பெயர்ந்த தமது உறவினர்களுடன் நோர்வேக்கு புலம் பெயர்ந்திருந்தார். நோர்வேக்கு வந்த ஹம்ஷாயினியின் பெற்றோர்கள் வட நோர்வேயில் மீன்பிடி தொழிற்சாலையொன்றில் பணியாற்றி தமது வாழ்வாதாரத்தை தேடிக்கொள்ள ஆரம்பித்தனர்.

ஒஸ்லோ பல்கலைக்கழகப் பட்டதாரியான ஹம்ஷாயினி தமது பல்கலைக்கழக காலம் முதல் இலங்கை பிரச்னையில் ஆர்வம் காட்டி வருபவராக இருந்து வருகின்றார். 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமது 23ஆவது வயதில் ஒஸ்லோவிலுள்ள மாணவர்களுக்கான ஒரு முகாமில் பங்குபற்றியபோது துப்பாக்கிதாரி ஒருவர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 69 பேர் கொல்லப்பட்டனர்.

அப்போது அந்த முகாம் இடம்பெற்ற தீவைச் சுற்றியிருந்த ஏரியில் சுமார் 500 யார் தூரத்தை ஹம்ஷாயினி நீந்திக்கடந்து உயிர் தப்பியிருந்தார். பின்னாளில், தமது பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட பின்னர் நோர்வேயின் தொழில்கட்சியின் இளைஞர் அமைப்பில் இணைந்து அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு ஒஸ்லோ நகர உபமேயராகவும் பணியாற்றி தற்போது பாராளுமன்ற உறுப்பினராக அந்நாட்டில் இருந்து வருகின்றார்.

நோர்வே, ஸ்கன்டிநேவிய பிராந்தியத்தில் சம்பிரதாய பூர்வமான முடியாட்சியுடைய நாடாக இருக்கின்ற போதிலும் அங்கே ஜனநாயக நடைமுறைகள் மிக உன்னதமான முறையில் இருக்கின்றன.

நோர்வேயின் வடக்கே கரஷோக் பிரதேசத்தில் இருக்கின்ற துருவ மான்களையே நம்பி வாழுகின்ற சாமி இனத்தவர்களுக்கென்றே அதிகாரப் பரவலாக்கத்துடன்கூடிய சுயாட்சி முறையை ஏற்படுத்திக்கொடுத்து அம்மக்களின் தனித்துவத்தை நோர்வே பாதுகாத்து வருகின்றது.

எனவே, இலங்கையிலும் சிறுபான்மையின மக்களின் தனித்துவத்துக்கும் உரிய முறையில் அரசியல் ரீதியாக முக்கியத்துவமளிக்க வேண்டுமென இலங்கையை பூர்வீகமாக கொண்ட நோர்வேயின் பாராளுமன்ற உறுப்பினர் ஹம்ஷாயினி குணரத்தினம் கோரியுள்ளார்.

சர்வதேச சமூகத்தின் உதவியை இலங்கை இனப்பிரச்னையை தீர்க்க உதவுமாறு கோரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கோரிக்கைக்கு சாதகமான சமிக்ஞையை கொடுப்பதாகவே ஹம்ஷாயினி குணரத்தினத்தின் சமரச முயற்சிகளில் ஈடுபடுவதற்கான விருப்பம் வெளிப்படுத்துகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
சொத்து வாங்கும் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். நிதிநிலை ஓரளவு சிறப்பாக இருக்கும். ஆன்மிக ஈடுபாடு வரும். முயற்சி ஒன்றில் சுமாரான முன்னேற்றம் ஏற்படும்.

**இடபம்**
முந்தைய முயற்சி ஒன்று இப்போது நல்ல பலன் தரும். உடன் பிறந்தவர்களால் எதிர்பார்த்த அளவு உதவிகள் இருக்காது. மருத்துவ ஆலோசனை பெறுவீர்கள். மனம் தெளிவாகும்.

**மிதுனம்**
வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். கல்வி சிறக்கும். தெய்வ வழிபாடு மன நிறைவு தரும். உற்சாகம் மிகும். நண்பர்களின் ஆலோசனைகளால் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்**
புதிய திட்டங்கள் தாமதமாகும். பணியாளர்கள் நன்மை அடைவர். குழந்தைகளின் நடவடிக்கை பற்றி கூடுதல் கவனம் வேண்டும். திருப்தியான நாள். திருமணம் ஏற்பாடாகும். உடல் நலம் சீராகும்.

**சிம்மம்**
புதிய அலுவலகம் சேரும் முயற்சியில் முன்னேற்றம் உண்டு. கவலை தீரும். போட்டி தேர்வுகளில் நல்ல மதிப்பெண் கிடைக்கும். மனதில் உற்சாகம் கூடும். பேச்சால் நன்மை உண்டு.

**கன்னி**
சாதாரணமாக பேசிய வார்த்தைகளால் நல்ல பலன் வரும். மனதில் புதிய உற்சாகம் பிறக்கும். தெய்வீக சிந்தனை நிறைவளிக்கும். இன்று அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

**துலாம்**
முதலீடுகள் செய்ய ஏற்ற காலம். பணியிடத்தில் ஏற்றம் உண்டு. தேவையான மருத்துவ சிகிச்சையால் நலம் அடைவீர்கள். பணியிடத்தில் கவனமாக செயல்படுங்கள். பேச்சில் நிதானம் தேவை.

**விருட்சிகம்**
வாகன வகையில் சிறிய செலவு ஏற்படும். வீண்வம்பைத் தவிர்க்கவும். சிறு மனஅழுத்தம் ஏற்பட்டு மறையும். செலவு ஏற்படும். நிலம் சம்பந்தபட்ட இனங்களில் முதலீடு செய்வது நல்லது.

**தனுசு**
உறவினர், நண்பர்கள் வீட்டு சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பொதுநல சேவை நன்மை தரும். பொழுதுபோக்கில் ஈடுபடுவீர்கள். எதிலும் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பீர்கள்.

**மகரம்**
சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு சிறு பற்றாக்குறை ஏற்படலாம். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபட்டு அதிகமாக உழைப்பீர்கள். முன்யோசனையுடன் செயல்பட்டு சிரமத்திலிருந்து மீளுவீர்கள்.

**கும்பம்**
பண நெருக்கடியால் குடும்பத்தில் பிரச்னை வராமல் கவனமாக இருங்கள். எலக்ட்ரானிக் சம்பந்தமான பொருள் வாங்குவீர்கள். சுபச்செலவுகள் ஏற்படும். பெண்களுக்கு மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
எதிர்பார்த்திருந்த நல்ல விஷயத்தில் தாமதம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடக்கும். பரபரப்பான நாள். தனவரவு நன்றாக இருக்கும். மூளை உழைப்பு அதிகரிக்கும்.

# வெற்றிபெற திராணி இல்லாத தி.மு.க. அரசு எமது வேட்பு மனுக்களை நிராகரிக்கின்றது

## உடந்தையான அதிகாரிகளுக்கு தண்டனை என்கிறார் எடப்பாடி



சென்னை, செப். 29

"உள்ளாட்சி தேர்தலில் அ.தி.மு.கவை எதிர்த்து வெற்றி பெற தெம்பில்லாத, திராணி இல்லாத தி.மு.க அரசு, அ.தி.மு.க. வேட்பாளர்களின் மனுக்களை நிராகரிக்கிறது" என அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துடன், "அதற்கு உடந்தையான அதிகாரிகள் தண்டிக்கப்படுவார்கள்" எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

உள்ளூராட்சி தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், கள்ளக் குறிச்சி மாவட்டத்தில் அ.தி.மு. கவை எதிர்த்து உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற தெம் பில்லாத, திராணி இல்லாத தி.மு.க. அரசு, அ.தி.மு.க. வேட் பாளர்களின் மனுக்களை நிரா கரித்துள்ளதாகவும், எந்த அச்சுறுத் தலுக்கும் அ.தி.மு.க. பயப்படாது எனவும், அ.தி.மு.க. ஆட்சியின் போது எடப்பாடி பழனிச்சாமியின் தொகுதியில் உள்ளாட்சி தொகுதிகளில் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயித்த தி.மு.க வினருக்கு ஜனநாயக முறைப்படி நாங்கள் விட்டுக் கொடுத்தோம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய எடப்பாடி, நாங்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளோம் எனவும் . தங்கள் கட்சி வேட்பாளர்களின் மனுக்கள் நிராகரிப்பிற்கு காரணமான அதிகாரிகள் இதற்கு நிச்சயம் பதில் சொல்லியே ஆக வேண்டும் எனவும் எச்சரிக்கை விடுத்தார். மேலும், தி.மு.க. தேர்தலின் போது அறிவித்த அறிவிப்புகளில் சிலவற்றை தங்கள் ஆட்சியில் கொண்டுவந்த திட்டங்களின் மட்டுமே பெயர் மாற்றி நிறைவேற்றி விட்டு பொய் பரப்புரைகளையும், விளம்பரங்களையும் செய்து வருகின்றனர் எனவும் குற்றம் சாட்டினார்.

# விஜய் மக்கள் இயக்கம் கலைக்கப்பட்டதா?



சென்னை, செப். 29

விஜய் மக்கள் இயக்கம் கலைக்கப்பட்டுவிட்டதாக நடிகர் விஜயின் தந்தையும் இயக்குநருமான எஸ்.ஏ.சந்திரசேகர் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

விஜய் மக்கள் இயக்கம் என்ற பெயரில் ஒரு கட்சியைத் தான் ஆரம்பித்துள்ளதாக சென்ற ஆண்டு திடீரென்று எஸ்.ஏ.சந்திரசேகர் அறிவித்தார். இதனை தேர்தல் ஆணைக் குழுவிலும் பதிவு செய்ய விண்ணப்பித்திருந்தார்.

உடனேயே இந்த மக்கள் இயக்கத்திற்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்றும், இந்த அமைப்பில் தனது ரசிகர்கள் யாரும் சேரக் கூடாது என்றும் அறிக்கை வெளியிட்டார் நடிகர் விஜய். கூடவே இந்த இயக்கத்தில் நிர்வாகிகளாக இருந்த தனது அப்பா, அம்மா மற்றும் சிலர் மீது சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தார் விஜய்.

தனது பெயரை பயன்படுத்தி பொதுக் கூட்டங்களை நடத்த தனது தந்தையான எஸ்.ஏ.சந்திரசேகர், தாய் ஷோபா சந்திரசேகர் உள்பட விஜய் மக்கள் இயக்கத்தினருக்குத் தடை விதிக்கவும் அந்த மனுவில் கோரியிருந்தார் விஜய்.

விஜயின் மனுவிற்கு பதில் அளிக்கும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு நீதிமன்றத்தில் இருந்து நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது எஸ்.ஏ. சந்திரசேகர் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில் கடந்த பெப்ரவரி மாதம் நடந்த பொதுக்குழு கூட்டத்தில் விஜய் மக்கள் இயக்கத்தை கலைப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டதாக கூறியிருக்கிறார் எஸ்.ஏ.சந்திரசேகர். இதைத் தொடர்ந்து வழக்கு ஒக்ரோபர் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த சூழலில், விஜய் தரப்பில் அவர் தொடங்கிய இயக்கத்தை யாரும் கலைக்கவில்லை. இயக்குநர் சந்திரசேகர் தொடங்கிய இயக்கம்தான் கலைக்கப்பட்டு உள்ளது என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் அதிகரித்துவரும் எதிர்ப்புக்கள் நியூட்ரினோ திட்டத்தை கைவிட வேண்டும்

## மத்திய அமைச்சரிடம் தமிழக அமைச்சர்கள் வலியுறுத்தல்



சென்னை, செப். 29

நியூட்ரினோ திட்டத்துக்கு தமிழகத்தில் எதிர்ப்புக்கள் அதிகரித்துள்ளதுடன், அதற்கு எதிரான போராட்டங்களும் இடம் பெறுவதால் அத்திட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டும் என தமிழக அமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

தமிழக அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் மத்திய மந்திரி பியூஷ் கோயலை அவரது அலுவலகத்தில் சந்தித்து நியூட்ரினோ திட்டத்தை கைவிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்கள். தி.மு.க. பாராளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு மற்றும் தமிழக தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வனத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், புதுடில்லிக்கான சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் ஆகியோர் டில்லியில் மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை மந்திரி பியூஷ் கோயலை சந்தித்து பேசினார்கள்.

"முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவுக்கு இணங்க, அமைச்சர் பியூஷ் கோயலை சந்தித்து சில திட்டங்கள் குறித்து பேசினோம். குறிப்பாக நாட்டில் அமைக்கப்பட உள்ள 7 புதிய பிடவை பூங்காக்களில் 2 பிடவைப் பூங்காக்களை தமிழகத்தில் அமைக்க வேண்டும் என கேட்டோம். இதைப் போல நியூட்ரினோ திட்டத்துக்கு தமிழகத்தில் உள்ள எதிர்ப்பு களை எடுத்துரைத்தோம். சம்பந்தப்பட்ட ஊராட்சியில் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, போராட்டங்கள் நடந்து வருகின்றன என்பதையும், நீதிமன்றில் வழக்குகள் உள்ளன என்பதையும் கூறினோம்" என டீ.ஆர். பாலு தெரிவித்தார்.



## ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் அமைச்சர் டக்ளஸ்டன் பேச்சு

கொழும்பு, செப். 29

சர்வதேச நாடுகளின் கடல் எல்லைகளுக்குள் தவறுதலாக அல்லது சட்டவிரோதமாக நுழைகின்ற இலங்கையின் ஆழ்கடல் மீன்பிடிக் கலன்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவருக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளக்கியுள்ளார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைய்பி தலைமையிலான குழுவினருக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர ஆகியோருக்கும் இடையிலான கலந்துரையாடலின் போதே மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தெளிவுபடுத்தப்பட்டது.

இச்சந்திப்பின் போது, ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் இலங்கை கடற்றொழிலாளர்கள், எல்லைதாண்டிச் சென்று வெளிநாடுகளில் கைதாகின்ற சமயங்களில் குறித்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள், பின்னர் அவர்கள் இலங்கைக்கு திரும்புகின்றபோது படகு உரிமையாளர்களுக்கு எதிராகவும் படகில் பணியாற்றிய தொழிலாளர்கள் மீதும் இலங்கையில் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் போன்றவை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

இந்நிலையில், கடற்றொழில் அமைச்சினால் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆழ்கடல் மீன்பிடிக் கலங்களுக்கு கண்காணிப்பு கருவிகளை பொருத்தும் செயன்முறையை சுட்டிக்காட்டிய கடற்றொழில் அமைச்சர், குறித்த செயற்றிட்டங்கள் நிறைவடைந்ததும் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் இலங்கையின் பலநாள் கலங்களை சிறப்பாக கண்காணிக்க முடியும் எனவும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தினார்.

இதுதவிர, மீன்பிடி தொடர்பான சர்வதேச நியமங்களுக்கு அமைய ஆழ்கடல் மீன்பிடி செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவது மற்றும் மீன்பிடிக் கலங்களின் எண்ணிக்கையை வரையறை செய்வது தொடர்பாகவும் கடற்றொழில் அமைச்சு அவதானம் செலுத்தி வருவதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்னாயக்க, இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜெயந்த சந்திரசோம, கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹாவத்த மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# கொரோனா கட்டுக்குள் வந்ததும் மாகாண சபைகளுக்கு தேர்தல்!

## அரசிடம் எதிரணி வலியுறுத்து



**கொழும்பு, செப்.29**

**கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்படி கட்சியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

தேர்தல்களை நடத்தும் விதம் பற்றி தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. எமது கட்சியும் யோசனைகளை முன்வைத்துள்ளது. உள்ளூராட்சிமன்ற, மாகாணசபை மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களை ஒரு முறைமையின்கீழ் நடத்தப்பட வேண்டும் என அரசு கூறுகின்றது. ஆனால் விகிசாதார முறைமை பாதுக்காக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

மாகாணசபைகளுக்கான தேர்தல் மூன்றாண்டுகள் பிற்போயுள்ளன. எனவே, அதற்கான தேர்தல் முதலில் நடத்தப்படவேண்டும். தற்போதைய நிலையில் நடத்தமுடியாது. ஆனாலும் கொரோனா வைரஸ் பரவல் ஓரளவு கட்டுக்குள் வந்த பின்னர் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். உள்ளாட்சிச் சபைகளின் ஆயுட்காலம் அடுத்தாண்டு பெப்ரவரி மாதம்தான் நிறைவு பெறுகின்றது. எனவே, மாகாணசபைகள் பற்றியே கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும். தேர்தல் என்பது ஜனநாயக உரிமை. அதனை அரசு பிற்போடக் கூடாது.

அதேவேளை, கொரோனா நெருக்கடியால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வாழ்வாதார வழிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரிப்பதை ஏற்கமுடியாது. பொருட்களின் விலைகள் இப்படி அதிகரிக்கின்றதெனில் அரசொன்று எதற்கு?" - என்றார்.

## அரிசி வகைகளுக்கு புதிய விலை

கொழும்பு, செப். 29

அரிசி வகைகளுக்கான அதிகபட்ச சில்லறை விலை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து மூன்று வகை அரிசிகளுக்கான விலையினை பாரிய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே குறித்த சங்கத்தின் தலைவர் டட்லி சிறிசேன இதனை தெரிவித்தார்.

இதனடிப்படையில் நாட்டரிசி ஒரு கிலோ 115 ரூபாய்க்கும் சம்பா அரிசி ஒரு கிலோ 140 ரூபாய்க்கும் கீரி சம்பா ஒரு கிலோ 165 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, செப். 29

சீரற்ற காலநிலை தொடர்ந்து வரும் நிலையில் இலங்கையில் 5 மாவட்டங்களுக்கு மண் சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

காலி, மாத்தறை, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின் எம்பிலிப்பிட்டிய, நெலுவ பகுதிகளுக்கும் மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ, கொடபல பகுதிகளுக்கும் கேகாலை மாவட்டத்தில் ருவான்வெல்ல மற்றும் எட்டியாந்தோட்டை பிரதேசங்களுக்கும் நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ காரேலே, இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட, களவானஎஹலியகொட, இரத் தினபுரி நிவித்திகல ஆகிய பகுதிகளுக்கும் மண்சரிவு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## இதய நோயுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு இந்திய வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை

கொழும்பு, செப். 29

இந்தியாவின் கொச்சியில் அமைந்துள்ள அம்ரிதா மருத்துவ விஞ்ஞான நிறுவனம் (அம்ரிதா வைத்தியசாலை) மூலம் இதயநோயுடன் கூடிய பிள்ளைகளுக்காக இதய சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும் திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதுதொடர்பிலான அமைச்சரவைத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஒவ்வொரு வருடமும் எமது நாட்டில் 3000 குழந்தைகள் இதயநோயுடன் பிறக்கின்றனர். அவர்களில் 1500 - 2000 பேருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியும் உள்ளது.

கூடுதலான வைத்தியசாலைகளிலிருந்து இவ்வாறான பிள்ளைகளை கொழும்பு சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு அனுப்புவதுடன், ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட 900 சத்திர சிகிச்சைகளை மாத்திரமேமேற்கொள்வதற்கான வசதிகள் குறித்த வைத்தியசாலையில் காணப்படுகின்றன.

அதனால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற 'லிட்டில் ஹார்ட்' செயல்திட்டத்தின் கீழ் சத்திர சிகிச்சை கூடம் மற்றும் அவசர சிகிச்சைக்காக போதுமானளவு வசதிகளை வழங்குவதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரைக்கும் இதய சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான நெரிசலைக் குறைப்பதற்காக இந்தியாவின் 3201 மாவட்ட சர்வதேச றோட்டரி கழகம் மற்றும் RID 3220 கொழும்பு மேற்கு றோட்டரி கழகத்தால் இந்தியாவின் கொச்சியில் அமைந்துள்ள அம்ரிதா வைத்திய விஞ்ஞான நிறுவனத்தில் பிள்ளைகளுக்கான சிக்கலான இதய சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காக இரண்டு வருடங்களுக்கான கருத்திட்டமொன்று றோட்டரி கழகத்தின் நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சும் இந்தியாவின் 3201 மாவட்ட சர்வதேச றோட்டரி கழகம் மற்றும் RID 3220 கொழும்பு மேற்கு றோட்டரி கழகத்திற்கும் இடையில்புரிந்துணர்வு உடன்பாடொன்றை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்தயோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

## வெள்ளியன்று நாட்டை திறக்க வழிகாட்டுதல்கள் தொகுப்பு

### தடுப்பூசி போடாதவர்களுக்கு நடமாட தடையில்லை

கொழும்பு, செப். 29



ஒக்ரோபர் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு நாட்டை மீண்டும் திறப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன என்று இராணுவ தளபதி, ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கோவிட்-19 தடுப்பூசியைப் பெறாத நபர்கள் பொது இடங்களில் நுழைய முடியாது என்று எந்தக் கட்டுப்பாடும் வெளியிடப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் கண்டியில் ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

"ஒக்ரோபர் முதலாம் திகதி அதிகாலை 4 மணிக்கு நாட்டைத் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளை குறிவைத்து தேவையான பரிந்துரைகளை வழங்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மக்களுக்குத் தேவையான வழிமுறைகளைத் தயாரிக்குமாறு அனைத்து அமைச்சுகளுக் கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது" என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

# அத்தியாவசிய பொருள்களை விடுத்து சிகரெட்டுக்கு வரியை அதிகரியுங்கள்

## செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை

கொழும்பு, செப். 29

**அத்தியாவசிய பொருள்களை விடுத்து சிகரெட்டுக்கான வரியை அதிகரிப்பு செய்யுங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதமர் மற்றும் நிதி அமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.**



நாட்டில் ஏற்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு தொடர்பாக நேற்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

அத்தியாவசிய பொருள்களுக்கான வரியை அரசாங்கம் அதிகரிக்கும் போது, சிகரெட்டின் மீதான வரியை அதிகரிக்க ஏன் பின்வாங்குகின்றது.

இவ்வாறான சூழலில்தான் அரசாங்கம் ஏழைமக்களின் அத்தியாவசியப் பொருட்களின் மீதான வரியை அதிகரித்து வருகின்றது.

ஒரு சிகரெட்டின் விலையை ரூபாய் 20 ஆல் உயர்த்தியிருந்தால் சுமார் 10 ஆயிரம் கோடி ரூபாயை இழக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

இன்று பெரும்பாலான சிறுவர்கள் முதல் பெரியோர் வரை இதனை பயன்படுத்துவதும் இதற்கு அடிமையாகி காணப்படுவதினாலும் இது ஒரு பாரிய சமூக சீர்குலைவுக்கு வழிவகுத்துக் கொண்டிருக் கிறது என்பதில் எந்த சந் தேகமும் இல்லை.

எனவே இதனை தடுக்க வேண்டுமென்றால் அரசாங்கம் சிகரெட் மீதான முறையான வரி முறைமையை கடைப்பிடிக்கவேண்டும்.

அவ்வாறான வரி முறைமையினால் அரசாங்கம் தனது வருமானத்தை அதிகரிக்கச் செய்வதோடு பாவனையிலும் சடுதியான வீழ்ச்சியை ஏற்படுத்த முடியும்.

இன்றைய காலப்பகுதியில் சிகரெட் பாவனையை குறைப்பதானது கோவிட் -19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கும் பாரிய உதவியாக அமையும் என்பதும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே மக்கள் பிரதிநிதி என்ற வகையில், எதிர்வரும் 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முன்வைக்கப்படவுள்ள 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் சிகரெட் மீது முறையாக வரி அறவிடப்படும் கொள்கையொன்றை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவீர்கள் என தீர்க்கமாக நான் நம்புகின்றேன்-என்றுள்ளது.

## சடலங்கள் எரிக்க கட்டணம் மாற்றம்

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட கோம்பயன் மணல் மின் தகன மயானத்தில் தகனம் செய்யப்படும் சடலங்களுக்கான கட்டணத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று மாநகர சபையின் முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மின் தகன கட்டணத்தில் மாற்றம் செய்வதற்கு சபை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி 12 வயதுக்கு குறைந்த கொரோனா தொற்றாளர்களின் சடலங்களுக்கு 4 ஆயிரம் ரூபாயும், ஏனைய கொரோனா தொற்றாளர்களின் சடலங்களுக்கு 8 ஆயிரம் ரூபாயும் தகனம் செய்வதற்கு அறவிடப்படவுள்ளதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கொரோனா தொற்று அல்லாத சடலங்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் அறவிடப்படவுள்ளதாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மடு தேவாலயத்துக்குரிய 50 ஏக்கர் விவசாய காணியில் 27 விவசாயிகள் குத்தகை அடிப்படையில் விவசாயம்

மன்னார், செப். 29

மடு-கோயில் மோட்டை பகுதியில் உள்ள மடு தேவாலயத்திற்கான 50 ஏக்கர் விவசாய காணியில் 5 ஏக்கர் காணியில் மடு தேவாலயம் சார்பாக விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, ஏனைய காணிகளில் 27 விவசாயிகள் குத்தகை அடிப்படையில் இவ்வளவு காலமும் மடு தேவாலயத்துக்கு குத்தகையை செலுத்தியே விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளதாக மன்னார் மறைமாவட்ட காணிப் பொறுப்பாளர் அருட்பணி இ. அன்ரனி சோசை அடிகளார் தெரிவித்தார்.



விவசாயிகள் போராட்டத்தின்போது...

மடு-கோயில் மோட்டை பகுதியில் உள்ள விவசாய காணி தொடர்பாக நீண்ட காலம் இடம் பெற்ற கருத்து முரண்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்ற இந்த ஊடக சந்திப்பில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்து நாயகம் அடிகளார், மடுத்திருத்தல பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட காணிப் பொறுப்பாளர் அருட்பணி இ. அன்ரனி சோசை அடிகளார், மடுத்திருத்தல முன்னைநாள் பரிபாலகர் பி.எமிலியானுஸ் பிள்ளை அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மறைமாவட்ட காணி பொறுப்பாளர் அருட்பணி இ. அன்ரனி சோசை அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மடு-கோயில் மோட்டை விவசாயக் காணி தொடர்பாக அண்மையில் காணி ஆணையாளர் தலைமையில் மடு பிரதேச செயலகத்தில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் அடிப்படையில் காணி ஆணையாளர் நாயகம் அனைவரிடமும் விசாரணைகளை மேற்கொண்டதன் பிற்பாடு அவர் வழங்கிய தீர்மானத்தின் படி இவ்வருடம் கடந்த வருடத்தை போன்று மடு பரிபாலகரினால் அவ்விடத்தில் 5 ஏக்கர் காணியில் விவசாயம் செய்யப்படவும்,ஏனைய காணிகளில் ஏனைய விவசாயிகள் மேற்கொண்டு வந்தது போன்று 2 ஏக்கர் வீதம் விவசாயிகளுக்கு பிரித்துக் கொடுக்கவும் அதிகாரிகளுக்கு பணித்தார்.

இந்த நிலையில் விவசாய உத்தியோகத்தரினாலேயே மடு தேவாலயத்துக்கு இந்த கால போகத்துக்குரிய விவசாயக் காணியை காட்டியதன் பிற்பாடு மடு பரிபாலகர் தனது வேலையாள்களை அனுப்பி குறித்த விவசாய காணியில் 2 தடவைகள் உழுதுள்ளார்.

பின்னர் கடந்த ஒரு வாரத்தில் நாங்கள் குறித்த காணிக்குச் சென்று உழுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டபோது ஏனைய விவசாயிகள் குறித்த காணிக்குள் செல்லக் கூடாது. அது உங்கள் காணி இல்லை என அவர்கள் தற்போது கூறி வருகின்றனர்.

ஆனால் காணி ஆணையாளர் நாயகம் அவர்களினாலேயே வழங்கப்பட்ட கட்டளைக்கு அமைவாக நாங்கள் குறித்த காணியில் இந்த கால போகத்திலே விவசாயம் செய்ய வேண்டும். நாங்கள் 5 ஏக்கர் காணியில் மேற்கொண்டு வரும் விவசாயத் தில் கிடைக்கும் பணத்தில் மடு தேவாலயத்தின் அபிவிருத்திப் பணிக்காகவும், பிறர் நல சேவைக் காகவும் சிறுவர் காப்பகங்களில் உள்ள தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவும் கால காலமாக நிதியை பயன்படுத்தி வருகிறோம்.

ஏற்கனவே காணி ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட கட்டளைக்கு அமைவாக தற்போது குறித்த விவசாய காணியில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் 27 பேரும் தங்களது காலபோக பயிர்ச் செய்கையின் பிற்பாடு, அவர்கள் மடு தேவாலயத்துக்கு குத்தகையை செலுத்த வேண்டும் என காணி ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

குத்தகை மூலம் கிடைக்கும் அனைத்து நிதியும் பிறர் நல சேவைக்காகவும்,சிறுவர் இல்லங்களில் உள்ள தேவைகளை நிவர்த்தி செய்யவும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

மேலும் மாவட்ட காணி பயன்பாட்டு திட்டமிடல் கூட்டத்தில் மடு தேவாலயத்துக்கு பயிர்ச் செய்கைக்கு 50 ஏக்கர் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை தொடர்பாகவும்,குறித்த காணியில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் 27 விவசாயிகள் உரச் சலுகையை பெற்றுக்கொள்வதற்காக இவ்வளவு காலமும் காணி உரிமையாளராக மடு தேவாலயம் என்று குறிப்பிட்டு ஆவணம் தயாரித்து உரச் சலுகையையும் பெற்று வந்துள்ளனர்.

மேலும் குறித்த 27 விவசாயிகளும் தங்களது கையினால் எழுதியுள்ள கடிதத்தின் அடிப்படையில், மடு தேவாலயத்திற்கு சொந்தமான கோயில் மோட்டையில் உள்ள வயல் காணியை விவசாயச் செய்கைக்கு குத்தகைக்கு தந்து உதவும் படியும், குத்தகையாக ஒரு காணிக்கு ஒரு மூட்டை நெல் கொடுப்பதற்கு ஒப்புதல் வழங்குவதாகவும், தங்களின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடப்போம் என கூறிக் கொள்கிறோம் என்று தங்களது கையொப்பத்துடன் கடிதத்தை சமர்ப்பித்து உள்ளனர்-என்றார். குறித்த கடிதங்கள் மற்றும் உரிய ஆவணங்கள் ஊடகங்க ளுக்கு காண்பிக்கப்பட்டன.

# வெள்ளைப் பூண்டு மோசடி விவகாரம்
# பத்திரிகையாளர்களை விசாரிக்கவேண்டாம்!
## சி.ஐ.டிக்கு பிரதமர் அறிவுறுத்து

கொழும்பு, செப்.29

**லங்கா சதொச சம்பந்தப்பட்ட வெள்ளைப் பூண்டு மோசடி குற்றச் சாட்டு குறித்து செய்தி வெளியிட்ட பத்திரிகையாளர்களை விசார ணைக்கு அழைக்க வேண்டாம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குற்றப் புலனாய்வுத் துறைக்கு அறிவுறுத்தியுள்ளாரென ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்று தெரிவித்தார்.**

நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக்குப் பின்னரான ஊடகவியலாளர் சந்திப்பின் போது செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் டலஸ் அழகப்பெரும, வெள்ளைப் பூண்டு ஊழல் குறித்து செய்தி வெளியிட்ட பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் 6 பேர் சி.ஐ.டியால் விசாரணைக்கு அழைக்கப்பட்டதாகக் கூறினார்.

இந்நிலையிலேயே மோசடி தொடர்பான விசாரணைகளுக்காக பத்திரிகையாளர்களை அழைக்க வேண்டாம் என்று சி.ஐ.டிக்கு பிரதமர் அறிவுறுத்தியதாக அவர் மேலும் கூறினார்.

நாங்கள் பத்திரிகையாளர்களிடம் மன்னிப்பு கேட்கிறோம். ஊடகவியலாளர்கள் விசாரிக்கப்பட மாட்டார்கள் என அமைச்சர் சரத் வீரசேகரவும் அறிவித்துள்ளார் எனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டார்.

சதொச நிறுவனத்துக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட 56 ஆயிரம் கிலோ வரையிலான இரு வெள்ளைப் பூண்டு கொள்கலன்களை உயர் அதிகாரிகளின் எந்த அனுமதியும் இன்றி, மூன்றாவது தரப்பொன்றுக்கு விற்பனை செய்து பெரும் மோசடி இடம்பெற்றதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தை வெளிக்கொணர்ந்த தனக்கு பதவியை இராஜினாமா செய்யுமாறு அரசியல் அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷான் குணவர்த்தன அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார்.

இந்நிலையில் வெள்ளைப் பூண்டு அடங்கிய இரண்டு கொள்கலன்களை பிறிதொரு தரப்பினருக்கு வழங்கியதாக குறிப்பிடப்படும் விடயம் தொடர்பில் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுமார் 4 மணித்தியாலங்களுக்கும் அதிக நேரம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் அண்மையில் பதவி விலகிய



போது முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் மற்றும் வெள்ளைப் பூண்டு விவகாரம் ஆகியவை குறித்து தான் பொலிஸ்மா அதிபரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தன்னிடம் வாக்குமூலம் பதிவு செய்ததாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பிலேயே பத்திரிகையாளர்கள் சிலரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறான நிலையிலேயே பத்திரிகையாளர்களை விசாரணைக்கு அழைக்க வேண்டாம் என பிரதமர் மஹிந்த குற்றப் புலனாய்வுத் துறைக்கு அறிவுறுத்தியுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

# ஒதுக்கீட்டு சட்டமூலத்துக்கு ஒப்புதல்! விரைவில் பாராளுமன்றில் முன்வைப்பு

கொழும்பு, செப். 29

2022 ஆம் நிதியாண்டுக்கான, நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன் தினம் இரவு 'ஒன் லைன்'மூலம் நடைபெற்றது. இதன்போது நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முன்வைத்தார். இதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் முதலாம் வாசிப்புக்கென விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பரில் சபையில் முன்வைக்கப்படும்.

# வவுனியாவில் மேலும் 47 பேருக்கு தொற்று

வவுனியா மாவட்டத்தில் மேலும் 47 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றுக் காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 47 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

# வடக்கு ஆளுநரின் தீர்மானத்தை ஆட்சேபித்து நேற்று மனு தாக்கல்

கொழும்பு, செப். 29

வட மாகாண ஆளுநரால், மன்னார் பிரதேச சபை தவிசாளர் நீக்கப்பட்டமையை ஆட்சேபித்து, தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிரினால், நேற்று கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் எழுத்தாணை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு இன்று இடம்பெறவுள்ள நிலையில், குறித்த எழுத்தாணை மனு இன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இன்று இடம்பெறவுள்ள புதிய தவிசாளருக்கான தெரிவை இடைநிறுத்தக் கோரியும், தவிசாளர் மற்றும் உறுப்புரிமையிலிருந்து தாம் நீக்கப்பட்டமை சட்டத்துக்கு முரணானது எனவும், அவற்றுக்கெதிராக தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் குறித்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

தவிசாளர் முஜாஹிர் சார்பில், சட்டத்தரணிகளான என்.எம்.ஷஹீட், சந்தீப கம்மதிகே ஆகியோரினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு, இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெற்றோர்மீது தாக்குதல் நடத்தியவர் பொலிஸாரையும் தாக்குவதற்கு முயற்சி
## வானத்தை நோக்கி சுட்டு இளைஞர் கைது

யாழ்ப்பாணம், செப். 29

கோண்டாவில் பகுதியில் பெற்றோர் மீது தாக்குதல் நடத்திய இளைஞர் பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொள்ள முயன்றதை அடுத்து வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கோண்டாவில் செபஸ்தியார் தேவால பகுதியில் பெற்றோர்மீது தாக்குதல் நடத்திய இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டபோது அவர்கள் மீதும் தாக்குதல் நடத்த முயன்றார். பொலிஸார் அவரை கட்டுப்படுத்த வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம்



மேற்கொண்டு கைது செய்தனர்.

குறித்த இளைஞர் தாய் மீதும், தந்தை மீதும் கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்திய நிலையில் அயலவர்களால் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு சென்றபோது பொலிஸார் மீதும் தாக்குதல் முயற்சியை மேற்கொண்டு விட்டு அவர் தப்பியோட முயன்றுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் கைத்துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டு அவரை கைது செய்தனர்.

# எரிபொருள் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படமாட்டாது

கொழும்பு, செப். 29

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை என இணை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவித்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது அமுலாக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீடிக்கப்பட்டதையடுத்து, எரிபொருள் கொள்வனவுக்கு தேவையான அந்நிய செலாவணி குறைவடைந்துள்ளதாக அண்மையில் பாராளுமன்ற உறுப்பின் ரணில் விக்ரமசிங்க குற்றஞ்சாட்டியிருந்த நிலையிலேயே, அமைச்சர் ரமேஷ் பத்திரண இவ்வாறு தெரிவித்தார்.

# காப்புறுதி நிறுவனத்தில் தீ!

திருமலை, செப். 29

திருகோணமலை உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள காப்புறுதி நிறுவனத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

அந்த நிறுவனத்தின் பின்புகமாக உள்ள வாகன உதிரிப்பாகங்கள் சேமித்து வைக்கப்பட்ட இடத்தில் குறித்த தீ விபத்து ஏற்பட்டது.

சம்பவத்தை தொடர்ந்து அந்த பகுதிக்கு சென்ற திருகோணமலை நகரசபை தீயணைப்புப் படையினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ விபத்துக்கான காராணம் இன்னமும் அறியப்படாத நிலையில் திருகோணமலை தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பல்கலைக்கழகங்களில் ஆங்கிலம்!

> ஆங்கிலம் கற்பதற்கான ஊக்கத்தை மாணவர்கள் மத்தியில் உண்டாக்க வேண்டுமெனில் பல்கலைக் கழகங்களில் மொழியானது, வெற்றுத் தகைமையை மட்டும் சுட்டி நிற்கும் பரீட்சைகளிலிருந்து வேறுபிரிக்கப்பட வேண்டும்.

**நிகொலா பெரேரா**

பெரும்பாலான கலைப் பட்டதாரிகள் வேலையின்றிக் காணப்படுவதற்கான காரணம் அவர்களது ஆங்கிலப் புலமைக் குறை பாடே எனக் கருதுகிறது தனியார் துறை. கலை மற்றும் மனிதநேயப் பட்டமானது பயனற்றது என்பது ஒரு வழமையான கருத்தாகும். பல்கலைக்கழகங்கள் மாணவர்களுக்கு ஆங்கிலப் புலமையை அளிக்கத் தவறுகின்றன என்ற வெளித்தோற்றமானது இக் கருத்தை மேலும் வலுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. கலைப் பட்டதாரிகள் பொதுமக்கள் கண்ணோட்டத்தில் தோல்வியடைந்தவர்களாக எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றார்கள் என்பது பற்றி இக்கட்டுரையில் பார்வையிடப்படுகின்றது. மேலும், பல்கலைக்கழகங்களில் ஆங்கிலம் கற்பிப்பதற்கான தர்க்க ரீதியான ஒரு மாற்றுக் கல்விமுறையின் தேவையும் இங்கு கலந்துரையாடப்படுகிறது.

கலைப் பட்டதாரிகள் தொடர்பாக நிலவும் பின்வரும் கருத்தானது மக்களுக்குப் பெரிதும் பழக்கப்பட்டதொன்றாகும். பொது மக்கள் பணத்தில் கல்வி கற்கும் இம்மாணவர்கள் பயனுள்ள STEM கல்வியையோ, பொருளாதார மதிப்புள்ள வேறு கற்கை நெறியையோ பின்பற்றுவதை விடுத்துக் கலை மற்றும் மனிதநேயக் கல்வியில் பயனற்றவற்றைக் கற்கின்றனர். இவர்கள் கொடூரமான பகிடிவதையில் ஈடுபடுவதோடு, இலவசக் கல்வியைப் பாதுகாக்குமாறும், அரச தொழில்களைப் பெற்றுத்தருமாறும் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டமும் செய்கின்றார்கள். ஆகவே பொது மக்கள் பார்வையில் இப் பல்கலைக்கழக மாணவர்கள் சகல சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்ட போதிலும் அவற்றைப் பயன்படுத்தத் திராணியற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள். மேலும் இலாபகரமான தனியார் துறைத் தொழில்களைப் பெறுவதற்கு ஆங்கிலப் புலமையானது, இவர்களைப் பொறுத்த வரையில் ஒரு முட்டுக்கட்டையாக உள்ளது என இம்மாணவர்களுக்குக் கூறப்படுகின்றது.

**பொதுவான எண்ணம்: பொதுக் கல்வியானது பயன்படுத்தப்படாத ஆதாயங்களின் திரட்டாகும்**

புதிய தாராளமயமாக்கத்தை நியாயப்படுத்துவதற்காக ஒரே மாதிரியான வாதங்களே தொடர்ந்தும் முன்வைக்கப்படுகின்றன. அதாவது சந்தைப்படுத்தக் கூடிய ஆற்றல்களைக் கற்பிக்காதவிடத்து அரச பல்கலைக்கழகங்களும், குறிப்பாக கலை மற்றும் மனிதநேயக் கல்வியும் பொதுமக்களின் நிதியை வீணடிப்பதோடு எதிர்காலத்துக்கான வழி, கட்டணம் அறவிடும் தனியார் கல்வியே எனக் குறிப்பிடப்படுகின்றது. சரியாகக் கூறப்போனால் தனியார் கல்வி முறை மூலம் பாரிய இலாபமீட்டக்கூடிய முதலாளிமார்களையும், ஒரு தொகை துணைச் சேவைகளையுமே கட்டணம் அறவிடும் தனியார் பல்கலைக்கழகங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவ்வாறான ஒரு விடயத்தை மேலும் கவர்ச்சிப்படுத்துவதற்கு அரச கல்விக்கான நிதியைக் குறைத்து அதனை முடிந்தவரை வினைத்திறனற்றதாக மாற்றும் ஒரு திட்டதையும் அவை சுட்டிக்காட்டுகின்றன. இந்த செயற்திட்டங்கள் உண்மையில் பல தசாப்த காலங்களாக இடம்பெற்று வருவதோடு மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான வளங்களும் அருகிய நிலையில் உள்ளன. அதிக விலையுடைய தனியார் கல்வி மூலம் மாணவர்களைத் தவிர பணத்தைப் பெருக்ககூடிய தரப்புகள் பல காணப்படுவதால் அரசும் இலவசக் கல்வி மீது பாரிய ஆர்வமோ அர்ப்பணிப்போ காட்டாது உள்ளது.

கலைப்பட்டதாரிகளின் உறுதியற்ற ஆங்கிலப் புலமையானது, அரசின் புதிய தாராளவாத பொருளாதாரக் கொள்கையின் கீழ் இலவசக் கல்வியானது நிலை தழும்புவதன் பாரதூரமான பின்விளைவாகும். அதனைத் தொடர்ந்து வரும் சமுதாய உரைநடைகளும் பிரச்சினைகளின் மூலகாரணங்களைத் தெளிவற்றவையாக்கின்றன. யதார்த்தத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஆங்கிலம் கற்பதற்கான திடசித்தம், அச்சம், விரக்தி ஆகிய அனைத்தும் காணப்படுகின்றன. இலங்கையில் இலவசக் கல்வியின் சமூக சமத்துவமின்மைகள் பற்றி அம்மாணவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள். எமக்குப் பெரும்பாலும் ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆசிரியர் ஒருவர் இருப்பதில்லை அல்லது சில சமயங்களே ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். பாடப்புத்தகங்களும் பற்றாக்குறையாகவே காணப்பட்டன. ஆங்கில ஆசிரியர் குழப்பமடைந்து காணப்பட்டார் பாடப்புத்தகத்தை அப்படியே வாசித்தார் வகுப்புக்கு வந்தார் ஆனால் கற்பிக்கவில்லை வேறு வேலையில் ஈடுபட்டார். இதன் விளைவாக இப் புதிய தாராளவாதக் கருத்தியலின் கீழ் பிரச்சினைகளும் தீர்வுகளும் தனிநபரடிப்படையில் பிளவுபட்டுக் காணப்படும் நிலையில் மாணவர்கள் பிரயாசைப்பட வேண்டியுள்ளது. சமுதாய மூலதனத்தின் குறைபாட்டையும், வீடுகளில் பேசப்படாத ஒரு மொழியைக் கற்க வகுப்பறைக் கல்வியில் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும் நன்கறிந்த மாணவன், எமது அமைப்பு முறையிலுள்ள குறைபாடுகளைத் தனது சுய தோல்விகளாக உள்வாங்குகின்றான். அதாவது வளங்கள் குறைந்த பாடசாலைகள், ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை, மற்றும் அவர்களது குறைந்த பயிற்சியும் சம்பளமும் குறைபாடுகளாகவுள்ளன.

ஒன்றுசேர்ந்த சமுதாய நலனை விடுத்துக் குறித்த சில உயர்குழுவினருக்கான விற்பனைப் பொருளாகக் கல்வியைக் கையாளுவதில் நாம் எப்போது இன்பம் காண ஆரம்பித்தோம்?

மொழியொன்றைக் கற்பிப்பதானது ஏனைய பாடங்களைக் கற்பிப்பது போன்றதல்ல. ஒரு மொழியின் அடிப்படைகள் இலகுவில் கற்பிக்கக்கூடிய கோட்பாடுகளல்ல. இதனைத் தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவாகக் கற்பித்தலுக்கான கருவிகள் மிகையாக எளிமைப்படுத்தப்பட்டிருப்பதோடு, அடிப்படைகளும் போதியளவு உள்ளடக்கப்படாதுள்ளன. ஆனால் ஒரு மொழியைக் கற்பதன் மிகவும் கடினமான கூறு அதன் அடிப்படைகளாகும். ஆகவே, வாசித்தல், கதைத்தல், எழுதுதல் போன்றவற்றில் பயிற்சி பெற மாணவர்களுக்குப் போதியளவு நேரம் வழங்கப்பட வேண்டும். அது மட்டுமல்லாது மொழிகள் சமூகம் மற்றும் இடைத்தொடர்பாடல் சார்ந்தவை: அதாவது மாணவர்கள் ஒன்றாகக் கற்க வேண்டும்.

**கொள்கைப் பிரச்னைகள்: தீர்வுகளுக்கான பழைய முயற்சிகளின் பயனற்ற எச்சங்கள்**

கலை மற்றும் மனிதநேயக் கல்வியின் "பொருந்துமை" மற்றும் "சந்தைப்படுத்தக்கூடிய தன்மையை" அதிகரிக்க முயற்சிக்கப்பட்டது. அந்த நோக்கத்துடன் பல்கலைக்கழக அனுமதியின் போது நடாத்தப்படும் ஆங்கிலப் புலமைப் பரீட்சையில் விலக்களிக்கப்படாத அனைவருக்கும் ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட்டது. எனினும் மொழியைக் கற்பதிலன்றிப் பரீட்சைப் பெறுபேறுகளில் கவனம் செலுத்துவது நன்மை பயக்குவதிலும் பார்க்கப் பயனற்றதாகவே காணப்படுகின்றது. நடைமுறையில் பரீட்சைகள் அவற்றின் பொருத்தத்தை இழக்கும் வரை ஐதாக்கப்பட்டுள்ளமையே இடம்பெற்றுள்ளது.

மாணவர்களும் ஆங்கிலக் கற்கை நெறியைக் கடுமையான, அதிகாரத்துவமான ஒரு தேவையாகவும், முடியுமான வரை சமுகமளிக்க அவசியமற்ற வகுப்புக்களாகவும் பார்வையிட ஊக்குவிக்கப்படுகிறார்கள். இது மொழியைக் கற்கும்-கற்பிக்கும் நடவடிக்கைகளை நிலைகுலையச் செய்கின்றன. ஆங்கிலம் கற்பதற்கான ஊக்கத்தை மாணவர்கள் மத்தியில் உண்டாக்க வேண்டுமெனில் பல்கலைக்கழகங்களில் மொழியானது, வெற்றுத் தகைமையை மட்டும் சுட்டி நிற்கும் பரீட்சைகளிலிருந்து வேறுபிரிக்கப்பட வேண்டும்.

**ஒன்றுதிரட்டப்பட்ட, தர்க்க ரீதியான ஊடகமாக வகுப்பறைகள்**

ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்களைக் குழந்தைகள் போன்று நடத்துவதை முதலில் நிறுத்த வேண்டும். கனிவான ஒரு நபர் அறிவை வழங்குவது என்ற நிலையை ஆசிரியர்கள் அடைவதை இது உருவாக்குவதோடு இலங்கையில் காணப்படும் ஆங்கில ஆதிக்க மனப்பான்மையை மேலும் வலுப்படுத்துகின்றது. கற்பித்தல் கருவிகள் வளர்ந்த ஒரு நபரின் அறிவாற்றலையோ அவரது தனிப்பட்ட/சமூகம் சார்ந்த அடையாளத்தையோ அவமதிப்பதாக இருக்கக் கூடாது. பல்கலைக்கழக மாணவர்களின் ஆங்கிலப் புலமை குறைவானதாக இருப்பினும் அதனைக் கற்பதற்கு அவர்களின் ஆர்வத்தைக் கவரக்கூடியதாகப் பாட உள்ளடக்கம் இருக்க வேண்டுமேயொழிய, சிறு பிள்ளைகளுக்காக எழுதப்பட்டவையாக அவை இருத்தல் கூடாது. இலக்கண நெறிமுறைகளை எளிமையாக்கப்பட்ட சுருக்கங்களாகக் கற்பிப்பது நிறுத்தப்பட வேண்டும். அதற்குப் பதிலாக ஆங்கிலம் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றதோ அவ்வாறு கற்பிப்பதன் மூலம் வாக்கியங்களிலும் பந்திகளிலும் இலக்கணத்தின் முறையான கையாளுகையை அவர்களுக்குணர்த்த வேண்டும்.

ஆங்கில உரையாடல்களுக்கு பழக்கப்படும் வகையில் வகுப்பறைச் சூழல்கள் மாற்றப்படுவதோடு பாடத்திட்டமானது மாணவர்களின் நாளாந்த அனுபவங்களைப் பிரதிபலிப்பவையாகவும் அவற்றை விவரிக்க ஆங்கிலத்தைப் பிரயோகிக்கத் தூண்டுபவையாகவும் இருத்தல் வேண்டும்.

நிகழ்நிலையாகவோ நேரடியாகவோ நடாத்தப்படும் ஆங்கில வகுப்புகள் மாணவர்கள் ஒன்று சேர்ந்து தாக்குப்பிடிக்ககூடிய ஊடகங்களாக மாற வேண்டும். மாணவர்களை வாழ்க்கையில் பின்தங்கிய நிலையில் தடுத்து வைத்திருக்கும் சக்திவாய்ந்த சமூகக் குறியீடாக ஆங்கிலப் புலமைக் குறைபாடு கருதப்படுகின்றது. தனிப்படுத்தப்பட்ட புலமைப்பரிசிலாகக் காணப்படும் உயர் கல்வியை, ஒன்றிணைந்த, ஒருங்கிணைக்கப்பட்ட ஆங்கிலக் கல்வியனுபவமாக மாற்றுவதற்கான மற்றும் ஒன்றுசேர்ந்து சமூக உயர் நிலையை அடைவதற்கான அபிலாஷைகளிலிருந்து ஆங்கிலம் பயிலுவதற்கான ஆர்வம் எழ வேண்டும்.

பொதுமக்கள் சிந்தையிலும், மாணவர்களின் கண்ணோட்டத்திலும் ஆங்கிலம் கற்பதன் முக்கியத்துவம் பெரிதாகக் காணப்பட்ட போதும், ஆங்கில வகுப்பறைகள், குறிப்பாகக் கலைப் பீடங்களில் வெறுமையான, பயனளிக்காத, பெறுபேறுகளைப் பெற்றுத் தராத வெற்றிடங்களாகவே காணப்படுகின்றன. இவ்வெற்றிடங்களின் மிகையான சக்தியையும் ஆற்றலையும் ஆசிரியர்களும் மாணவர்களும் உணர வேண்டும். ■

**எழுத்தாளர் கொழும்புப் பல்கைலைக்கழகத்தின் கலைப் பீடத்தில் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவில் பணியாற்றிவருகின்றார்.**

**மொழிபெயர்ப்பு: கோபிகா சிவகுமார்**

# அரசியலிலிருந்து விடைபெறும் ஜேர்மனியின் இரும்பு பெண்



வ.ரங்காசாரி

இஸ்ரேல் பிரதமர் கோல்டா மேயர், பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரெட் தட்சர், இந்திய பிரதமர் இந்திரா காந்தி, இலங்கை பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க, மியன்மார் தலைவர் ஆங்சான் சூகி. இவர்களைப் போல உலக அரசியல் வரலாற்றில் என்றைக்கும் ஒளிரும் நட்சத்திரமாக ஏஞ்செலா மெர்க்கெல் இருப்பார். பெற்றோர் இட்ட பெயருக்குப் பொருத்தமான தேவதைதான் அவர். 16 ஆண்டு காலம் ஜேர்மனியின் பிரதமராக இருந்து விட்டு அரசியலிலிருந்து விடைபெறுகிறார். மெர்க்கெல்லுக்குப் பிறகு யார் என்று ஜேர்மனி மட்டுமல்லாது, உலக நாடுகள் அனைத்தும் கவனிக்கும் அளவுக்கு அரவணைக்கும் தலைவராக இருந்தவர் மெர்க்கெல்.

1954 ஜூலை 17 இல் அன்றைய மேற்கு ஜேர்மனியின் ஹாம்பர்க் நகரில் பிறந்தார் மெர்க்கெல். மெர்க்கெல்லின் தந்தை ஹோர்ஸ்ட் கஸ்னர், தாயார் ஹெரிண்ட். தந்தை ஜேர்மனியர், தாய் போலந்துக்காரர். அதனால் இவ்விரு மொழிகளும் மட்டுமல்லாமல், ரஷ்ய மொழியும் சரளமாகப் பேசுவார் மெர்க்கல் ஆழ்ந்த மத நம்பிக்கை உள்ளவர்.

லுத்தரன் திருச்சபை போதகரான தந்தை கிழக்கு ஜேர்மனியில் தேவ ஊழியம் செய்ய முடிவு செய்ததால், மெர்க்கெலும் அங்கே நகர்ந்தார். பள்ளிக்கூடத்தில் ரஷ்ய மொழியிலும் கணிதத்திலும் முதல் மாணவியாகத் திகழ்ந்தார். லீப்சிக் நகரின் கார்ல் மார்க்ஸ் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் படித்தார். படிப்பு முடிந்ததும் பொறியியல் கல்லூரியில் உதவிப் பேராசிரியர் வேலை கேட்டார். கல்லூரியில் பணிபுரிவோரை உளவு பார்த்து தகவல் தருவதாக இருந்தால் வேலை தருகிறோம் என்றது நிர்வாகம். எனக்கு எதையும் இரகசியமாக வைத்துக்கொள்ளத் தெரியாது என்று கூறி அந்த வேலையை நிராகரித்தார். பின்னர் குவாண்டம் கெமிஸ்ட்ரி பிரிவில் ஆய்வு செய்து 1986 இல் கலாநிதி பட்டம் பெற்றார். 1989 வரை ஆய்வாளராக இருந்தார்.

இதனூடாகவே தனது 23ஆவது வயதில் உடன் பயின்ற இயற்பியல் மாணவர் உல்ரிச் மெர்க்கெலை 1977 இல் மணந்தார். 1982இல் அந்தத் திருமணம் முறிந்தது. வேதியியல் பேராசிரியர் ஜோசிம் சாவரை 1981 இல் சந்தித்தார் 1998 இல் இருவருக்கும் மணம் ஆனது. கால்பந்தாட்டத்துக்குத் தீவிர ரசிகை மெர்க்கல். பிற்காலத்தில் பாராளுமன்றத்தில் இருக்கும்போதுகூட கால்பந்து நேர்முக வர்ணனை என்றால் மூழ்கிவிடுவார்.

### ஜேர்மனியின் முதல் பெண் பிரதமர்

மெர்க்கல் 1989இல் அரசியலுக்கு வந்தார். லோதர் டி மெய்சியரின் கிழக்கு ஜேர்மானிய அரசின் ஊடகத் தொடர்பாளராகச் சிறிது காலம் பணியாற்றினார். கிறிஸ்தவ ஜனநாயக கட்சியின் (சிடியு) பொதுச் செயலாளராகப் பதவியேற்றார். மெர்க்கலின் அரசியல் செயல்பாடுகள் 1990 இல் கிழக்கு, மேற்கு ஜேர்மனிகள் இணைந்து ஒரே ஜேர்மனியானபோது அவரை பாராளுமன்றம் நோக்கி உந்தியது. மெக்லென்பர்க்-வோர்போமெரன் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார் மெர்க்கல்.

பிரதமர் ஹெல்முட் கோல் மகளிர், இளைஞர் நலத்துறை அமைச்சராக 1991இல் மெர்க்கலைத் தனது அமைச்சரவையில் இணைத்துக்கொண்டார். பிறகு சுற்றுச்சூழல், இயற்கைப் பாதுகாப்பு, அணுசக்தித்துறை அமைச்சராக அவர் 1994இல் நியமிக்கப்பட்டார். இந்தப் பயணத்தின் தொடர்ச்சியாக 2005 பொதுத் தேர்தலுக்குப் பிறகு, ஜெரார்ட் ஷ்ரோடருக்குப் பிறகு ஜேர்மனியின் பிரதமராகப் பதவியேற்றார்.

ஜேர்மனியின் முதல் பெண் பிரதமர் மெர்க்கல் இரண்டு ஜேர்மனிகளும் இணைந்து ஒன்றான பிறகு பிரதமரானதும் அவர்தான். ஒரு கூட்டணி அரசின் தலைவராகவே கடும் சவால்கள் மத்தியில் மெர்க்கல் பொறுப்பேற்றார். ஆட்சியை அவர் கையாண்ட விதமும் சர்வதேச அளவில் ஜேர்மனிக்கு அவர் உண்டாக்கிய மதிப்பும் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட செல்வாக்கை மக்களிடத்தில் மெர்க்கலுக்கு உண்டாக்கின. 2005, 2009, 2013, 2017 என்று அடுத்தடுத்து 4 முறை பிரதமராக அவர் பதவியேற்றார்.

### ஐரோப்பிய ஒன்றியத்தின் பெருந்தூண்

ஐரோப்பிய ஒன்றியம், வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் அமைப்பு (நேட்டோ), அட்லாண்டிக் கடலோர நாடுகள் என்று எந்த அமைப்பாக இருந்தாலும் அங்கே சர்வதேச ஒத்துழைப்பையே வலியுறுத்தி அதற்காகப் பாடுபட்டு உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தார் மெர்க்கல். 2007இல் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவராக இருந்து லிஸ்பன் உடன்படிக்கை, பெர்லின் பிரகடனம் ஆகியவற்றை வெற்றிகரமாக உருவாக்கினார்.

ஆபிரிக்க நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் போன்றவற்றிலிருந்து ஏராளமான அகதிகள் படகுகளில் உயிரைப் பணயம் வைத்து வந்தபோது ஐரோப்பிய நாடுகள் அவர்கள் இறங்க இடம் தர மறுத்தன. அந்த நெருக்கடியிலிருந்து அவர்களைச் சர்வதேச சமூகம் காக்க வேண்டிய பொறுப்பை உரக்கப் பேசி, ஜேர்மனியின் கதவுகளைத் திறந்து வைத்து முன்னுதாரணமாகத் திகழ்ந்தார் மெர்க்கல்.

### தாராள ஆராதகர்

ஜேர்மனியில் அணு ஆயுத உற்பத்தியைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டேவந்து முழுக்க அவற்றை ஒழிப்பது நோக்கி அவர் நகர்ந்தது பெரும் சாதனை. பசுமைக்குடில் இல்ல வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தவும் புதுப்பிக்கத்தக்க இயற்கை ஆற்றல்களை அதிகம் பயன்படுத்தவும் மூலவளங்களை உருவாக்கினார். ஜேர்மனி இராணுவத்தில் மக்கள் அனைவரும் சில ஆண்டுகள் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற கட்டாயத் திட்டத்தை நீக்கினார். அனைவருக்கும் சுகாதார வசதிகள் கிடைக்கும் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தார்.

சீனத்திலிருந்து 2019 இறுதியில் கொரோனா தொற்று ஐரோப்பாவில் பரவலானபோது, ஜேர்மனியில் உரிய தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து பெரும் பாதிப்பைத் தவிர்ப்பதில் பெரும் அக்கறையைக் காட்டினார் மெர்க்கல். 2011 முதல் 2012 வரையிலும் பிறகு 2014 முதலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவராக நீண்ட காலம் பதவி வகித்தார். 2021-க்குப் பிறகு பிரதமர் பதவியை மீண்டும் ஏற்க மாட்டேன், அரசியலிலிருந்து ஓய்வெடுக்கப் போகிறேன் என்று சி.டி.யூ. கட்சியின் மாநாட்டில் 2018 ஒக்ரோபரிலேயே அறிவித்து விட்டார்.

அணுசக்தி தயாரிப்பை ஜேர்மனி கைவிட வேண்டும் என்ற கோரிக்கை வந்தபோது, எதிர்க்கட்சியில் இருந்த மெர்க்கல், "இதில் அவசரப்பட வேண்டாம், நம்முடைய பொருளாதாரம் வளர்ந்த பிறகு இதில் கவனம் செலுத்தலாம்" என்றார். ஈராக்கில் அமெரிக்கப் படைகள் நுழைந்ததைக்கூட, "தவிர்க்க முடியாதது" என்று வரவேற்றார். ஐரோப்பிய ஒன்றியத்தில் துருக்கியை உறுப்பினராகச் சேர்க்க ஜேர்மனி அரசு அளித்த ஆதரவை கண்டித்த அவர், "சிறப்புக் கூட்டாளியாக வைத்திருக்கலாம், உறுப்பினர் பதவிக்கு என்ன அவசியம்?" என்று கேட்டார். துருக்கிக்கு எதிராக பெரும்பாலான ஜேர்மானியர்களுக்கு இருந்த எண்ணமே அவரிடமும் நிலவியது.

பல முரண்பட்ட முடிவுகளை எடுத்தார் என்றாலும், ஜேர்மனி மக்கள் மெர்க்கலைத் தங்களுக்கு அணுக்கமான தலைவராகவே பார்த்தார்கள். எந்த சர்வதேச அமைப்பின் தலைவராக இருந்தாலும் எந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதாக இருந்தாலும் அரவணைப்புணர்வுடன் நடந்துகொண்டார். தவறுகளைச் சுட்டிக்காட்டத் தயங்கியதில்லை. ஜேர்மனியின், ஐரோப்பிய ஒன்றியத்தின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்தார். அதேசமயம் உலகம் என்ற பொதுச் சமுதாயத்தின் ஓர் அங்கமாகவே எப்போதும் செயல்பட்டார். அகதிகள் பிரச்னையை இன, மத, மொழி, இட அடிப்படையில் ஆராய்ந்து கொண்டிருக்காமல் மனிதாபிமானப் பிரச்னையாகப் பார்த்தார். அதனால் எழுந்த விமர்சனங்களை இலட்சியம் செய்யவில்லை. ஜேர்மனிக்கு வரும் அகதிகள் உடலால், உணர்வால், உள்ளத்தால் ஜேர்மானியராகி விட வேண்டும் என்று கூறியதன் மூலம் இரு தரப்பாருக்கும் பாலமாக இருந்தார்.

### பலவீனங்களுக்கு முகம் கொடுத்தவர்

மெர்க்கலை 1995இல் நாய் கடித்துவிட்டது. அதிலிருந்து நாய் என்றாலே அவருக்கு பயம். 2007இல் பத்திரிகையாளர் சந்திப்பின்போது ரஷ்யத் தலைவர் விளாடிமிர் புடின் தன்னுடைய லேப்ரடார் நாயுடன் வந்தார். உங்களை அச்சப்படுத்துவதற்காக அல்ல' என்று மெர்க்கலைப் பார்த்து அவர் கூறினார். "தான் ஒரு ஆண்பிள்ளை என்று காட்ட நாயைக் கூட்டி வந்தார் புடின். தன்னுடைய சொந்த பலவீனம் குறித்து அவருக்கு அச்சம்" என்று காட்டமாகக் கண்டித்தார் மெர்க்கல்.

2017-க்குப் பிறகு மெர்க்கலுக்குக் கை நடுக்கம் ஏற்படுவது எல்லோருக்கும் தெரிந்தது. அதை மறைக்க அவர் முற்படவில்லை. 'உடலில் நீர்ச்சத்து குறைந்தால் அப்படியாகிறது' என்று அவர் பதில் அளித்தார். 2019 ஜூன் மாதம் தேசிய கீதம் இசைக்கப்பட்டபோது கை நடுக்கம் அதிகமானதால் நிற்க முடியாமல் இருக்கையில் அமர்ந்துவிட்டார்.

தான் அரசியலிலிருந்து விடைபெறுவது என்று எடுத்த முடிவு சரியானதுதான், இல்லையா என்று அவர் தனக்கு நெருக்கமானவர்களிடம் கேட்டார். ஜேர்மனி இப்போது அடுத்த தேர்தலை எதிர்கொண்டிருக்கும் நிலையில், தனக்கு அடுத்து கட்சியை வழிநடத்தவுள்ளோருக்காக உளமாரப் பணியாற்றினார் மெர்க்கல்.


ஜேர்மனி மக்கள் தங்களுடைய நேசமிக்க தலைவருக்கு அரசியலிலிருந்து விடைகொடுக்கிறார்கள். கூடவே ஐரோப்பாவும் சக்தி வாய்ந்த தலைவருக்கு விடைகொடுக்கிறது. மேற்கத்திய அரசியல் தலைவர்களிடமிருந்து படிக்க வேண்டிய பாடங்களில் ஒன்றாக நாம் இதையும் சொல்லலாம் நீங்கள் நல்ல நிலையிலும், புகழின் உச்சத்திலும் இருக்கும்போதே அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுவிட வேண்டும்!

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I, II
நேரம் : 1 மணித்தியாலம்

38. எந்தப் பொருட் சோடி மேலிருந்து பார்க்கப்படும் போது ◯ ○ எனத் தோன்றும்?



(1) (2) (3)

39. வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

கழிவு நீர் ஓடாது .............................. நிற்பதால் .............................. பெருகுகின்றன.

(1) பாய்ந்து - ஈக்கள்
(2) வற்றி - மின்கள்
(3) தேங்கி - நுளம்புகள்

40. குறித்தவொரு புகைப்படமொன்றில் உள்ள ஒரு நபரைக் காட்டி மேனகா என்பவர் இவ்வாறு கூறினார். 'அவர் எனது தந்தையின் தந்தைக்கு உள்ள ஒரே மகனினது மகனாவார்' அவ்வாறெனின், அந்தப் புகைப்படத்திலே உள்ள நபருக்கு மேனகா மீதுள்ள உறவுமுறை யாது?

(1) மாமா (2) சகோதரன் (3) தந்தை

* * *

---

✧ பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

01) "இவன், வகுப்பாசிரியரைப் போலச் சட்டம் பேசுகிறான். ஒழுங்கு என்கிறான்...... அத்துடன் பொருள்களை உரிய இடத்தில் வைக்க வேண்டும்; பாதுகாக்க வேண்டும் என்றும் சொல்கிறான். அது மட்டுமன்று, எல்லா மாணவர்களும் சத்தியனிடமே அன்பாகவும் நேசமாகவும் இருக்கிறார்கள். அவனுக்குத் தனி மரியாதையே கொடுக்கிறார்கள்" எனத் தன் எரிச்சலை ஆதவன் ஏனைய மாணவர்களிடமும் வெளிப்படுத்தினான். ஆனாலும் மாணவர்கள் பலர் சத்தியனுக்கு ஆதரவாகவே பேசினார்கள்.

✧ கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

i. அநாதரவு என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்லை எழுதுக.

..............................................................................................

ii. இரட்டைக்கொம்பும், அரவும், கீழ்க்காலும் கொண்ட சொல்லை எழுதுக.

..............................................................................................

iii. இப்பந்தியில் காணப்படும் ஒத்தகருத்துச் சோடிச் சொற்களை எழுதுக.

..............................................................................................

iv. உயர்திணை ஒருமை நிகழ்கால வினைச்சொல்லை எழுதுக.

..............................................................................................

v. "வகுப்பாசிரியரை" இச்சொல்லைப் பிரித்து எழுதுக.

..............................................................................................

vi. இப் பந்தியில் கையாளப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக.

..............................................................................................

vii. குணப்பெயர் ஒன்றை எழுதுக.

..............................................................................................

viii. பலர்பாற் பெயர்ச் சொல்லை எழுதுக.

..............................................................................................

(8 x 1 = 08 புள்ளிகள்)

02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

i. காடுகளை ..................ப்பதினால் சுற்றுச்சூழல் பாதிப்படைகின்றது. (அலி, அளி, அழி)

ii. .............................. உறக்கமின்றிப் பாடுபட்டு உழைத்த காரணத்தால் அவன் இன்று பணக்காரனாக இருக்கின்றான். (ஊன், ஊண்)

iii. இன்று கிராமியக் கலைஞர்களைக் காண்பது ................ காரியம் ஆகும். (அரிய, அறிய)

(3 x 1 = 03 புள்ளிகள்)

03) பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்தை எழுதுக.

i. ஏட்டிக்குப் போட்டி - ..............................................................................

ii. கடன் கழித்தல் - ..............................................................................

(2 x 1 = 02 புள்ளிகள்)

# ஊரடங்கு தளருமா? தொடருமா? ஜனாதிபதியின் கையில் முடிவு

## இன்று நாடு திரும்புகின்றார்

**கொழும்பு, செப்.29**

**நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் முதலாம் திகதிக்குப் பின்னர் நீடிப்பதா? இல்லையா? என்பது குறித்தான இறுதித் தீர்மானம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னர் எடுக்கப்படவுள்ளது.**



அமெரிக்காவிலிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று நாடு திரும்பவுள்ளார். அதன் பின்னர் கொரோனா தடுப்புச் செயலணியின் விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

நாடு திறக்கப்படுமாயின் புதிய சுகாதார வழிகாட்டல்களை அறிமுகப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி அரச அலுவலர்கள் கடமைகளுக்கு சமுகமளிக்கும் நேரம் காலை 9 மணியாகவும், தனியார்துறை ஊழியர்கள் சமுகமளிக்கும் நேரம் காலை 10 மணியாகவும் மாற்றுவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

அதற்கமைய போக்குவரத்துச் செயல்பாடுகள் இடம்பெறவுள்ளன.

அரச சேவையாளர்களுக்கான விசேட சுற்றறிக்கையை பொது நிர்வாக அமைச்சு இன்று வெளியிடவுள்ளது.

நாடு திறக்கப்பட்டாலும் பொது நிகழ்வுகள் மற்றும் திருமண நிகழ்வுகள் நடத்தப்பட உடனடியாக அனுமதி வழங்கப்படாது. இதேவேளை, பாடசாலைகளைத் திறப்பதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ)

# மேலும் 317 பேர் கைது!

கொழும்பு, செப். 29

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 317 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 5 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 78 ஆயிரத்து 914 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில் 161 வாகனங்களில் பயணித்த 274 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. (இ)

# மக்களின் எதிர்ப்பலைக்கு அஞ்சி தேர்தலை பிற்போட அரசு முயற்சி

## எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 29

"நாட்டு மக்களின் எதிர்ப்பலைகளுக்கு அஞ்சி மாகாண சபைத் தேர்தலை மேலும் பல மாதங்களுக்கு ஒத்திவைக்க அரசு முயல்கின்றது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

அரசுக்குத் துணிவு இருந்தால் காலம் தாழ்த்தாது உரிய காலத்துக்குள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் தேர்தல்களை நடத்திக் காட்ட வேண்டும் என்றும் அவர் சவால் விடுத்தார்.

அம்பாறை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த நேரத்தில் தேர்தலை நடத்தினால் மக்களின் வேதனைகளைப் புரிந்துகொள்ள முடியும்.



எனவே, சர்வதேசத்துக்குச் சென்று தேர்தல் தொடர்பில் பொய்களைக் கூறாது, உரிய காலத்தில் தேர்தலை அரசு நடத்த வேண்டும்.

தேர்தலை நடத்தினால்தான் அரசு தொடர்பாக மக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள முடியுமாக இருக்கும்"

- என்றார். (இ)

# ஏ.ரி.எம். இயந்திரத்தை உடைத்து பெருந்தொகை பணம் கொள்ளை

கொழும்பு, செப். 29

அநுராதபுரம் மாவட்டம், மின்னேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மினிஹீரிகம பிரதேசத்தில் தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரத்தை (ஏ.ரி.எம்) உடைத்து பெரும் தொகைப் பணத்தைக் கொள்ளை யிட்ட சம்பவம் பதிவாகியுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஹபரண- பொலனறுவை வீதிக்கு அருகிலுள்ள அரச வங்கி ஒன்றின் தன்னியக்கப் பணப்பரிமற்ற இயந்திரத்தில் பணம் கொள்ளையிட்டமை தொடர்பில் ஹிங்குரத்கொடை அரச வங்கியின் முகாமையாளரால் மின்னேரியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின்படி மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக, கடந்த 24ஆம் திகதி லொறி ஒன்றில் குறித்த தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரத்துக்கு அருகில் வந்த ஒரு குழுவினர், குறித்த தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரத்தின் தகடை வெட்டி எடுத்ததுடன் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கொள்ளையிடப்பட்ட பணத்தின் பெறுமதி இதுவரை மதிப்பிடப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மின்னேரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# தந்தை இயக்கிய இயந்திரத்தில் சிக்கி மூன்று வயது குழந்தை பரிதாப மரணம்

புத்தளம், செப். 29

புல் வெட்டிக் கொண்டிருந்த இயந்திரத்தில் சிக்கி மூன்று வயது குழந்தை ஒன்று உயிரிழந்தது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



புத்தளம் மாவட்டம், பள்ளம, சேருகெலே பிரதேசத்தில் தனது தந்தை புல் வெட்டிக் கொண்டிருந்த இடத்துக்கு வந்த குழந்தை புல்வெட்டும் இயந்திரத்தில் சிக்கி படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இயந்திரத்தைச் செலுத்திய தந்தை கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் பள்ளம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் வீட்டில் போதைப்பொருளும் துப்பாக்கியும் மீட்பு!

களுத்துறை, செப். 29

களுத்துறை மாவட்டத்தின் மத்துகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டதொலவத்த பிரதேசத்தில், புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடொன்றிலிருந்து போதைப்பொருட்கள், துப்பாக்கி என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் தலைமையகத்துக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக மத்துகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டதுலவத்த பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடொன்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.



குறித்த வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ கிராம் 55 கிராம் ஹெரோய்ன், 50 கிராம் ஐஸ் போதைப் பொருள், வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கி, போதைப்பொருட்களை அளவீடும் செய்யும் இலத்திர னியல் தராசு என்பவற்றை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள், துப் பாக்கி மற்றும் இலத்திரனியல் தராசு என்பவை பொலிஸ் போதைப்பொருள் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸ் போதைப் பொருள் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர். (இ)



# வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை!

சியோல், செப். 29

வடகொரியா அதன் கிழக்கு கடலோரப் பகுதியில் இருந்து மீண்டும் ஓர் ஏவுகணையை ஏவி சோதனை நடத்தியுள்ளது. நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை ஏந்த ஏவுகணை சோதனை இடம்பெற்றதாக தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

கிழக்கு கடல் என்று அழைக்கப்படும் ஜப்பான் கடற்பரப்பில் இந்த ஏவுகணை வீழ்ந்துள்ளது. இந்த மாத ஆரம்பத்தில் 1,500 கிலோ மீற்றர் தூரம் சென்று இலக்கைத் தாக்கக்கூடிய இரண்டு நீண்ட தூர ஏவுகணைகளை வட கொரியா பரிசோதித்த நிலையில் நேற்று மற்றொரு சோதனை இடம்பெற்றுள்ளது.

தென் கொரியாவுடன் பேச்சு நடத்த வடகொரியா விருப்பம் தெரிவித்த சில நாட்களுக்குப் பின்னர் இடம்பெற்ற இந்த ஏவுகணை சோதனை பேச்சுக்கான முட்டுக்கட்டையாக அமையலாம் என பாதுகாப்பு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, நேற்று ஏவப்பட்டது ஒரு பொலிஸ்டிக் ஏவுகணையாக இருக்கலாம் எனவும், இது ஐ. நாவால் தடை செய்யப்பட்டது எனவும் பாதுகாப்பு அமைச்சை மேற்கோள் காட்டி ஜப்பானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சம்பவத்தை அமெரிக்க அதிகாரிகளுடன் இணைந்து கண்காணித்து வருவதாக தென்கொரியாவின் கூட்டுத் தலைமை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)



# ஐன்ஸ்ரீன் வளைய ஒளிப்படம்: புதிய ஆய்வுக்கு வழிபிறந்தது!

நியூயோர்க், செப். 29

ஹப்பிள் தொலைநோக்கி மூலம் ஐன்ஸ்ரீன் வளையம் ஒளிப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஒளிப்படம் புதிய ஆய்வுக்கு வழிவகுக்கும் என்று விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நாஸா, ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி சர்வதேச கூட்டிணைப்பான ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி மூலம் 2020 டிசம்பரில் ஐன்ஸ்ரீன் வளையம் எனப்படும் நிகழ்வு ஒளிப்படமாக எடுக்கப்பட்டது. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வளையத்திற்கு மோல்டன் றிங் எனப் பெயரிடப்பட்டது.

ஐன்ஸ்ரீன் வளையம் எனப்படுவது தொலைதூர விண்மீன் மண்டலத்தில் இருந்து வரும் ஒளி இடையிலுள்ள ஈர்ப்பு விசையால் பார்ப்பவர்களுக்கு வளைந்து வட்டவடிவமான வளையம்போல் தோன்றும். இந்த நிகழ்வு முதன் முதலில் 1912 இல் அல்பேர்ட் ஐன்ஸ்ரீனால் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காரணமாக அவர் பெயராலே இந்த நிகழ்வு குறிக்கப்படுகிறது.

ஹப்பிள் வெளியிட்ட இந்த ஒளிப்படத்தைப் பயன்படுத்தி, 9 ஆயிரத்து 400 கோடி ஒளியாண்டுகள் தூரத்தில் விண்மீன் திரள் உள்ளதாக வானியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். புதிய நட்சத்திரங்கள் உருவாவதற்கு காரணமான மூலக்கூறு வாயு, துல்லியமான சிவப்பு மாற்றத்தைக் கணக்கிட எங்களுக்கு உதவியது. இதன் மூலம் நாம் உண்மையில் மிகவும் தொலைதூரத்தில் உள்ள விண்மீன் திரளைப் பார்க்கிறோம் என்ற நம்பிக்கையை அளிக்கிறது என்று மேக்ஸ் பிளாங்க் இன்ஸ்ரியூட்டின் மாணவர் நிகோலாஸ் சுல்செனோயர் கூறினார்.

மேலும், விண்மீன் திரளின் உருப்பெருக்கம் 20 மடங்கு என்பதால் இது, ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியின் கவனிக்கும் திறனை 48 மீற்றர் தொலைநோக்கியின் திறனுக்கு சமமானதாக ஆக்குகிறது. இது தற்போது திட்டமிடப்பட்டுள்ள மிகப் பெரிய தொலைநோக்கியை விட பெரியது என ஹப்பிள் வானியல் விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# கொரோனா தொற்று பரவல் நீண்டகாலத்துக்கு தொடரும்!

## உலக சுகாதார ஸ்தாபனம்

ஜெனிவா, செப். 29

கொரோனா வைரஸ் பரவல் நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக பரவும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

2019ஆம் ஆண்டின் இறுதியில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பல்வேறு நாடுகளும் பாதிக்கப்பட்டன. தொற்று பரவலைத் தடுக்க விதிக்கப்பட்ட பொதுமுடக்கங்களும், கட்டுப்பாடுகளும் உலக நாடுகள் பலவற்றிலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின.

கொரோனா முதல் அலை, இரண்டாம் அலை என பரிணமித்த வைரஸ் தொற்று பல நாடுகளில் மூன்றாம் அலை பாதிப்பிற்கு இட்டுச் சென்றன. இந்நிலையில் கரோனா வைரஸ் பரவல் என்பது எதிர்பார்த்த காலஅளவைக் காட்டிலும் மிகநீண்ட காலத்திற்கு இருக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் பூனம் கெத்ரபால் சிங் முந்தைய நோய்த்தொற்று மற்றும் தடுப்பூசி பயன்பாடு ஆகியவை கொரோனா வைரஸுக்கு எதிரான எதிர்ப்புத் திறனை அடைய உதவலாம் எனத் தெரிவித்துள்ளார்.

ஆபத்தான மதிப்பீடுகளின் அடிப்படையில் பார்த்தோமானால் உலக நாடுகள் வலுவான பொது சுகாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். மக்கள் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்தல், தனிமனித இடைவெளிகளைப் பின்பற்றுதல், முகக்கவசங்களை அணிதல், கிருமி நாசினிகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்டவற்றை தவறாமல் பின்பற்ற வேண்டும் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

பொதுசுகாதாரத்தை முதன்மையான ஒன்றாகவும் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய கட்டமைப்பையும் உருவாக்குவது கடுமையான சூழல்களில் மக்களைக் காக்க இன்றியமையாத ஒன்றாக அமையும் எனவும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (ஐ)

# கொரோனாவால் இறப்பவர்களில் அதிகளவினர் புகைபிடிப்பவர்கள்

## புதிய ஆய்வில் தகவல்

லண்டன், செப். 29

சிகரெட் புகைப்பவர்கள் கொரோனா தொற்றால் அதிகளவில் இறப்பார்கள் என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

ஒக்ஸ்போர்ட், பிரிஸ்டல் பல்கலைக்கழகம் மற்றும் நாட்டிங்ஹாம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் குழு இணைந்து முதன்மை பராமரிப்பு பதிவுகள்,கொரோனா சோதனை முடிவுகள், மருத்துவமனை சேர்க்கை தரவு மற்றும் இறப்பு சான்றிதழ்களை ஆய்வு செய்தது.

இதில், புகைபிடிக்காதவர்களுடன் ஒப்பிடுகையில், புகைபிடிப்பவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கு 80 வீதம் அதிக வாய்ப்பு உள்ளது. கொரோனா தொற்றால் இறப்பவர்களிலும் கணிசமானவர்கள் புகைபிடிப்பவர்கள் என்றும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மேலும், புகை பிடிப்பதால் நீங்கள் கொரோனா தொற்றால் கடும் பாதிப்புக்களை சந்திக்க நேரிடும். அத்துடன், இதய நோய், பல்வேறு புற்றுநோய், நுரையீரல் நோய்களுக்கும் இலக்காவீர்கள் என்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வாளர் கிளிப்ட் எச்சரித்துள்ளார்.

சிகரெட் பிடிப்பதை தவிரத்தால் நல்ல தேகாரோக்கியத்துடன் இருக்கலாம் என்றும் அவர் கூறினார். (ஐ)

# பிரான்ஸ் ஜனாதிபதிமீது முட்டை வீச்சு தாக்குதல்!

பாரிஸ், செப். 29

உணவகங்களின் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் கலந்துகொள்ளச் சென்ற பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் மீது நபர் ஒருவர் கோழி முட்டை ஒன்றை வீசினார். அது அவரின் நெஞ்சுப் பகுதியில் வீழ்ந்தது.

லியோன் நகரில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது. பாதுகாவலர்கள் உடனடியாக அந்த நபரைத் தனிமைப்படுத்தி கைவிலங்கிட்டனர்.

“என்னிடம் ஏதாவது பேச விரும்பினால் அந்த மனிதனை இங்கே வரவிடுங்கள்”, என்று மக்ரோன் அதிகாரிகளிடம் தெரிவித்தார். எனினும், பொலிஸார் அந்த நபரை தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

உணவகங்கள் மற்றும் உணவு விநியோக நிறுவனங்கள், ஹோட்டல் துறைகள் சார்ந்த சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்றுமுன்தினம் லியோன் நகரில் தொடங்கியது. அமைச்சர்கள் அதிகாரிகள் சகிதம் அங்கு வருகை தந்த அதிபருக்குப் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது. அச்சமயத்திலேயே முட்டை வீச்சு சம்பவம் இடம்பெற்றது. (ஐ)





# அமெரிக்க ஜனாதிபதி பூஸ்டர் டோஸ் பெற்றார்!

வாஷிங்டன், செப். 29

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பூஸ்டர் டோஸ் எனப்படும் மூன்றாவது கோவிட் 19 தடுப்பூசியை நேற்றுமுன்தினம் பெற்றுக்கொண்டார்.

அமெரிக்காவில் 65 வயதுக்கு மேற்பட்டோர், தீவிர நோய் நிலையுடைய நோயெதிர்ப்பு சக்தி கொண்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி போட அமெரிக்க நோய் கட்டுப்பாட்டு தடுப்பு மையம் ஒப்புதல் வழங்கிய சில நாட்களில் அமெரிக்க ஜனாதிபதி மாளிகையான வெள்ளை மாளிகையில் வைத்து ஜோ பைடனுக்கு மூன்றாவது தடுப்பூசி போடப்பட்டது.

78 வயதான ஜனாதிபதி ஜோ பைடன், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் பைசர் தடுப்பூசியையும், இந்த ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாவது பைசர் தடுப்பூசியையும் பெற்றறார். இந்நிலையில், அமெரிக்க அரச சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டல் கோவையின் பிரகாரம், அவர் மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்.

இந்த தொற்றுநோயை வெல்லவும், உயிர்களைக் காப்பாற்றவும் எல்லோருக்கும் தடுப்பூசி போட வேண்டியது அவசியம் என தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட ஜோ பைடன் தெரிவித்தார். (ஐ)

# கட்டுகடங்காமல் பரவுகிறது கலிபோர்னியா காட்டு தீ!

நியூயோர்க், செப். 29

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் சியரா நிவாடா மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வேகமாக காட்டுத் தீ பரவி வருகிறது. இதனை கட்டுப்படுத்த 2 ஆயிரம் தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர்.

11 சதுர மைல்கள் பரவியிருந்த இந்த காட்டு தீ 24 மணி நேரத்தில் 133 சதுர மைல்களுக்கும் அதிக பரப்பை ஆக்கிரமித்துள்ளது என்றுசீக்வோயா தேசிய வன அறிக்கை கூறுகிறது.

சுமார் 2,000 குடியிருப்புகள் மற்றும் 100 வணிக வளாகங்கள் காட்டுத்தீயால் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இரண்டு வணிக கட்டடங்கள் முழுவதுமாக தீயில் சேதமடைந்தன. அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த காட்டுத் தீயானது கலிபோர்னியாவில் மட்டும் பல இலட்சம் மரங்களைக் அழித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு





# இங்கிலீஸ் பிறீமியர் லீக் ஆர்சனல் அபார வெற்றி!

லண்டன், செப். 29

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்ட போட்டியில் டோட்டன்ஹோமுக்கு எதிரான ஆட்டத்தில் ஆர்சனல் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலீஸ் பிறீமியர் லீக்கில் 600 வெற்றிகளை பெற்ற அணிகளின் பட்டியலில் ஆர்சனல் அணியும் சேர்ந்துள்ளது. முன்னதாக மன்செஸ்டர் யுனைட்டெட் (691), செல்சீ (601) அணிகள் 600 வெற்றிகளை கடந்துள்ளன.

தவிர இது ஆர்சனல் அணிக்கு ஹட்ரிக் வெற்றியாகவும், டோட்டன்ஹோம் அணிக்கு ஹட்ரிக் தோல்வியாகவும் அமைந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு லண்டனில் நடந்த ஆர்சனல் - டோட்டன்ஹோம் அணிகளின் மோதலில், முதல் பாதியிலேயே 3 கோல்களையும் ஆர்சனல் அணி பெற்றுவிட்டது. பிறீமியர் லீக் வரலாற்றிலேயே 34 நிமிடங்களில் 3 கோல்கள் அடிக்கப்பட்டமை இதுவே முதன் முறையாகும்.

12ஆவது நிமிடத்தில் கோல் கம்பத்தின் வலது பக்கத்திலிருந்து புகாயோ சகா தட்டிக்கொடுத்த பந்தை துரிதமாக ஓடிவந்து கோல் கம்பத்துக்குள் உதைத்து கோலாக்கினார் எமிலி ஸ்மித் ரோவ். தொடர்ந்து 27ஆவது நிமிஷத்தில் சகா அடித்த பந்து பியர் எமெரிக் அவ்பாமெயாங்கிடம் வர, அதை அவர் ஸ்மித் ரோவிடம் திருப்பினார்.

ஸ்மித் அதை கோல் கம்பத்தின் இடது பக்கமாக கடத்திக் கொண்டு வந்து பியர் எமெரிக்கிடம் கொடுக்க தவறில்லாமல் சரியான இடைவெளி பார்த்து அதை கோலாக்கினார் அவர். பின்னர் ஆர்சனலின் கடைசி கோலை புகாயோ சகா 34ஆவது நிமிடத்தில் அடித்தார்.

இரண்டாவது பாதியில், 79ஆவது நிமிடத்தில் ஆறுதல் கோல் போட்டது டோட்டன் ஹோம். ரீகுய்லன் கோல் கம்பத்தின் இடது பக்கத்திலிருந்து கொடுத்த பந்தை கோலாக்கினார் சன் ஹியுங் மின்.

இறுதியில் 3 -1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் அணி வெற்றி பெற்றது. (ஐ)

# ராஜஸ்தானை வீழ்த்தி ஹைதராபாத் வெற்றி!

டுபாய், செப். 29

ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் ஹைதராபாத் அணி 7 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடக்கும் ஐ. பி. எல். தொடரின் 40ஆவது போட்டி டுபாயில் நேற்று முன்தினம் நடந்தது. இதில், சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் கேன் வில்லியம்ஸன் தலைமையிலான சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான், முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்புக்கு 164 ஓட்டங்களை பெற்றது. அணித் தலைவர் சஞ்சு சாம்சன் 57 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 7, பௌண்ட்ரிகள் அடங்கலாக 82 ஓட்டங்களையும், யஷஸ்வி ஜெய்ஸ்வால் 36 ஓட்டங்களையும், மஹிபால் லோமோர் 29 ஓட்டங்களையும் அதிகப்படியாகப் பெற்றனர்.




165 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத், 18.3 ஓவர்களில் மூன்று விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்களை பெற்று வெற்றியிலக்கை அடைந்தது. ஜசன் ராய் 42 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 60 ஓட்டங்களையும், கேன் வில்லியம்சன் 41 பந்துகளில் ஒரு சிக்ஸர், 5 பௌண்ட்ரிகள் அடங்கலாக 51 ஓட்டங்களையும் பெற்றனர். (ஐ)

# இன்சமாமுக்கு மாரடைப்பு!

இஸ்லாமாபாத், செப். 29

பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும், தேர்வுக் குழுத் தலைவருமான இன்சமாம் உல் ஹக் மாரடைப்பு தாக்கத்தால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

லாகூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் நேற்று முன்தினம் மாலை சேர்க்கப்பட்ட இன்சமாம் உல் ஹக்கிற்கு ஆஞ்சியோ பிளாஸ்ரி சிகிச்சை செய்யப்பட்டது. இந்த சிகிச்சைக்குப் பின் அவரின் உடல்நிலை சீராக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

பாகிஸ்தான் அணி 1992ஆம் ஆண்டு உலகக் கோப்பையை வென்றபோது அந்த அணியில் இடம் பெற்றிருந்தவர் இன்சமாம் உல் ஹக். வலதுகை துடுப்பாட்டவீரரான இன்சமாம் உல் ஹக் பாகிஸ்தான் அணியில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களை குவித்த வீரராவார்.

375 ஒருநாள் போட்டிகளில் 11,701 ஓட்டங்களையும், 119 டெஸ்ட் போட்டிகளில் 8,829 ஓட்டங்களையும் அவர் சேர்த்துள்ளார். கடந்த 2007ஆம் ஆண்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற இன்சமாம், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையில்பல்வேறு பதவிகளை வகித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹைதராபாத் அணியில் வோர்ணருக்கு இடமில்லை?


டுபாய், செப். 29

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியில் அவுஸ்திரேலிய வீரர் டேவிட் வோர்ணருக்கு இந்தத் தொடரில் களமிறங்க இனிமேல் வாய்ப்புக் கிடைக்காது என்று அந்த அணியின் பயிற்றுநர் ட்ரீவோர் பேலிஸ் சூசகமாகத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ஹைதராபாத் அணி ராஜஸ்தானை வீழ்த்தியது. முன்னதாக இந்தத் தொடரில் ஹைதராபாத் அணி 8 போட்டிகளில் தோல்வியை தழுவியுள்ளது. இதனால், பிளே ஒவ் சுற்றுக்கு செல்லும் வாய்ப்பு அந்த அணிக்கு இனி கிடைக்காது. எனினும், இன்னமும் 4 போட்டிகள் அந்த அணிக்கு உள்ளன.

இந்தப் போட்டிகள் வலுவான அணிகளுக்கு எதிரானது என்பதால் வெற்றி என்பது கடினம். இதனால், இளம் வீரர்களுக்கு வாய்ப்பளித்து அவர்களின் திறமையை பரிசீலிக்க அணி திட்டமிட்டுள்ளதாக பயிற்றுநர் தெரிவித்துள்ளார்.

எனினும், அனுபவமான வீரர்களை முழுமையாக அமர வைக்கும் திட்டமில்லை. அடுத்து வரும் சில நாட்களில் 18 வீரர்களை தெரிவு செய்து அனுபவ வீரர்களுடன் விளையாட வைப்போம். அடுத்து வரும் போட்டிகளில் வோர்ணர் பார்வையாளராக தொடர்ந்து வழிகாட்டுவார். ஏலத்துக்கு முன் இதுதான் கடைசி போட்டி. வோர்ணரை பொறுத்தவரை சன்ரைசர்ஸ் அணிக்கு ஏராளமான பங்களிப்புச் செய்துள்ளார். ஐ. பி. எல். தொடரில் அதிக ஓட்டங்களையும் குவித்துள்ளார் - என்றும் கூறினார். (ஐ)



# லா லிகா உதைபந்தாட்டம் பார்சிலோனா அணி வெற்றி!




பார்சிலோனா, செப். 29

ஸ்பெயினில் நடைபெறும் லா லிகா உதைபந்தாட்டப் போட்டியில் பார்சிலோனாஅணி 3-0 என்ற கோல் கணக்கில் லெவான்டேவை வீழ்த்தியது.

மெஸ்ஸி வெளியேறிய பிறகு தடுமாற்றத்தை வெளிப்படுத்திய பார்சிலோனா அணி கடந்த இரு போட்டிகளில் தோல்வியை தழுவியது. இதனால், அந்த அணிக்கும், அதன் பயிற்றுவிப்பாளர் கோமேனுக்கும் வெற்றி தேவையான ஒன்றாக இருந்தது. நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் கடந்த ஒரு வருடமாக காயத்தால் விளையாடாத அன்சு பட்டி களம் பார்சிலோனா அணிக்காக களமிறங்கி கடைசி நிமிடத்தில் கோல் அடித்தார். அத்துடன், அவர் மெஸ்ஸியின் 10 இலக்க சீருடையை அணிந்திருந்தார். அவருக்கு முன்னதாக மெம்பிஸ் டிபே (7), லூக் டி ஜோங் (14) ஆகியோர் கோலடித்தனர். (ஐ)

# யாழ். மாநகர சபையில் தியாக தீபத்துக்கு அஞ்சலி!

## பொலிஸாரின் அடாவடிக்கு எதிராக கண்டன தீர்மானமும் நிறைவேற்றம்



யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் பொலிஸாரின் செயல்பாடுகளுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு மாநகர சபையின் மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது சபையின் ஆரம்பத்தில் தியாக தீபம் திலீபனுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன், தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் வைத்து கடந்த 23ஆம் திகதி யாழ். மாநகர சபை உறுப்பினர் ரஜீவ்காந் யாழ். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமை மற்றும் ஏற்றப்பட்ட தீபத்தைப் பொலிஸார் காலால் தட்டிவிட்டமை உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, யாழ். மாநகர சபை அமர்வில் நேற்று நடைபெற்ற தியாக தீபம் திலீபனுக்காக அஞ்சலி நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மாநகர சபை உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ - 03)

# மரக்குற்றிகள் விழுந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

கண்டி, செப். 29

கிரேனின் உதவியுடன் மரக்குற்றிகளை இறக்கும்போது அதன் கேபிள்கள் அறுந்து மரக்குற்றிகள் கீழே வீழ்ந்ததால் மர ஆலை ஒன்றின் ஊழியர் ஒருவர் உயிரிழந்தார்.

கண்டி - கட்டுகஸ்தோட்டையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அக்குரணை பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய குடும்பஸ்தரே இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் கிரேன் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# அஸாத் ஸாலியின் விளக்கமறியல் ஒக்ரோபர் 12ஆம் திகதி வரை நீடிப்பு

கொழும்பு, செப். 29

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலியின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அஸாத் ஸாலி, தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் இன ரீதியான சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டில் கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினால் அஸாத் ஸாலி கைது செய்யப்பட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட அஸாத் ஸாலியால் இந்த மாத தொடக்கத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை கோரிக்கை மனுவும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# 'சூம்' இல் கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்பு!

## மட்டக்களப்பில் சோகம் பொலிஸ் விசாரணை தீவிரம்

**மட்டக்களப்பு, செப்.29**

**மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள வீட்டிலிருந்து சிறுமி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.**



மட்டக்களப்பு, அரசடி - பொற்கொல்லர் வீதியிலுள்ள வீட்டில் சிறுமியின் சடலம் காணப்படுகின்றது என நேற்று முன்தினம் இரவு கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட சிறுமி மட்டக்களப்பின் பிரபல பெண்கள் பாடசாலையில் தரம் 08 கல்வி பயிலும் 13 வயது மாணவி எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் மரணம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை பெற்றோர் வெளியில் சென்ற நிலையில் சகோதரிகள் இருவர் வீட்டில் இருந்தனர். சடலமாக மீட்கப்பட்ட சிறுமி 'சூம்' ஊடாக கற்றல் நடவடிக்கையிலிருந்த நிலையில் அவரது அக்கா குளியலறையில் இருந்தார். குளியலறையிலிருந்து வெளியே வந்தபோது 'சூம்' கற்றல் நடவடிக்கையிலிருந்த தனது தங்கை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார் என்று பொலிஸாரிடம் அக்கா தெரிவித்தார்.

சிறுமியின் மரண விசாரணையை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெட்ணம் மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (இ)

# கட்டுக்கலை தோட்டத்தில் முறுகல் 4 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு



தலவாக்கலை, செப். 29

தலவாக்கலை, கட்டுக்கலை பிரதேசத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் இடையில் நேற்று ஏற்பட்ட முறுகலில் நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தலவாக்கலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர்கள் தம்மைத் தாக்கினர் எனத் தெரிவித்து தோட்டத்தின் உதவி முகாமையாளரும் சிரேஷ்ட அதிகாரி ஒருவரும் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று தோட்டத்தின் உப அதிகாரியும், சிரேஷ்ட அதிகாரியும் தாக்குதல் மேற்கொண்டனர் எனது தெரிவித்து, பெண் தொழிலாளர்கள் இருவர் லிந்துலை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெளிப்பிரதேசங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை அழைத்துவந்து பணியில் ஈடுபடுத்துவதை அடிப்படையாக வைத்து தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து கட்டுக்கலை பிரிவைச் சேர்ந்த சுமார் 150 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேற்றுப் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

சம்பவம் தொடர்பில் தோட்டத் தொழிலாளர்களும் தோட்ட நிர்வாகத்தினரும் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (இ)

# 100,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்ய தீர்மானம்

கொழும்பு, செப். 29

அரிசியின் மொத்த மற்றும் சில்லறை விற்பனைக்கு விதிக்கப்பட்ட அதிகபட்ச விலை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்யவும், 100,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்யவும் அமைச்சரவை தீர்மானித்தது.

உள்நாட்டு சந்தையில் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட அரிசி தட்டுப்பாட்டை தடுக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பால் மா, லாஃப் சமையல் எரிவாயு, கோதுமை மா மற்றும் சீமெந்து தொடர்பில் நேற்றுமுன்தினம் அமைச்சரவை கூட்டத்தில் எவ்வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

# முழங்காவில் பகுதியில் மூன்று கடைகள் தீக்கிரை!

கிளிநொச்சி, செப். 29

கிளிநொச்சி, பூநகரி - முழங்காவில் பகுதியில் உள்ள மூன்று கடைகள் தீக்கிரையாகியுள்ளன.

முழங்காவில் பகுதியில் அமைந்திருந்த குறித்த கடைகள் நேற்று நண்பகல் வேளை திடீரென தீப்பற்றி எரிந்தன.

இதன் போது இரு பலசரக்கு வியாபார நிலையம் மற்றும் அலைபேசி நிலையம் என்பன தீக்கிரையாகின. தீ விபத்து சம்பவத்துக்கு காரணம் என்ன என்பது இதுவரை கண்டறியப்படவில்லை.

## ஜி. எஸ். பி. பிளஸ்...

மேலும், தமிழர்களுக்கு நீடித்த - நிலையான தீர்வே தேவை. தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் பேச எந்த அரசாங்கமும் தயாராக இல்லை என்றும் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஜி. எஸ். பி. பிளஸ் வர்த்தக சலுகையை இலங்கைக்கு நீடிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக வந்த ஐரோப்பிய ஒன்றிய குழுவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பிலுள்ள வீட்டில் நடந்த இந்த சந்திப்பு சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்தது.

இதன்போது, தமிழ் மக்களின் நிலங்களை அபகரிப்பதற்கும், குடிப்பரம்பலை மாற்றியமைக்கவும் அரசாங்கங்கள் அனைத்தும் செயல்பட்டாலும், இந்த அரசாங்கம் அதில் மிக வேகமாக செயல்பட்டு வருகிறது. தொல்லியல் திணைக்களத்தின் மூலம் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. திருகோணமலையில் தொல்லியல் திணைக்களத்தால் காணிகளை இழந்த மக்கள் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

மட்டக்களப்பு மேய்ச்சல் தரவை தமிழ் மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ளது. அதை நம்பி வாழ்ந்த பண்ணையாளர்கள் கைவிடப்பட்டுள்ளனர். பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டுமென நாம் நீண்டகாலமாக கேட்டு வருகிறோம். இப்போது ஐரோப்பிய ஒன்றியமும் வலியுறுத்துகின்றது. எனினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலை சாட்டாக வைத்து அதை நீடிக்க அரசாங்கம் முயல்கிறது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் நடந்த சம்பவம், நடப்பு சூழலை தெளிவாக பிரதிபலிக்கிறது. தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுகிறார்கள். பல தசாப்தங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கில் நிர்வாக அதிகாரிகளாக சிங்களவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அனைத்து வழிகளிலும் சிங்கள மயமாக்கல் தீவிரமாக நடந்து வருகிறது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமை தொடர்பில் எந்தவொரு பேச்சுக்கும் அரசாங்கம் தயாராக இல்லை. ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் ஜி.எஸ்.பி பிளஸ் வர்த்தக சலுகையை பெறுவதற்கான தரநிலைகள் பலவற்றை இலங்கை பூர்த்தி செய்யவில்லை. இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வழங்குவதெனில், அந்த தரநிலை முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

இலங்கையின் தரநிலை மேம்படாத நிலையில், ஜி. எஸ். பி பிளஸ் சலுகையை வழங்கக்கூடாதென ஐரோப்பிய பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதை நீங்கள் மிக தீவிரமாக கணக்கிலெடுக்க வேண்டும். இந்த தரநிலைகளை இலங்கை பூர்த்தி செய்யாமல், ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை வழங்கப்பட்டால், அது சிறுபான்மையினரை ஒடுக்கும் அரசாங்கத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நீண்ட விளக்கத்தை வழங்கினர்.

இந்த விவகாரங்களில் குறுகிய கால தீர்வு எதையாவது யோசிக்கலாமா என ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் கேட்டனர்.

அவ்வாறு வழங்க வேண்டாம் எனக் கோரிய தமிழ் தேசிய கூட்டமைப்பினர் நீடித்த, நிலையான தீர்வே தமிழ் தரப்பால் ஆராயப்படும், அதுவே தேவையானது என்றனர்.

இந்த விவகாரங்களில் தமக்கும் வரையறைகள் உள்ளன. நாளை அரசாங்கத்துடன் நடக்கும் மீளாய்வு கூட்டத்தில் இந்த விவகாரங்களை ஆராய்வதாக ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவர் த. சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், இரா. சாணக்கியன் கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## மாகாணசபை...

"இதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறப்பதற்கு நான் தயார். வடமேல் மாகாணத்தில் இருந்து பல தரப்பினரும் எனக்கு அழைப்பு விடுத்துள்ளனர்." என்றும் தயாசிறி ஜயசேகர கூறினார்.

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து வெளியேறி சுதந்திரக்கட்சியில் இணைந்த பின்னர், வடமேல் மாகாண தேர்தலில் தயாசிறி ஜயசேகர போட்டியிட்டார். அந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற அவர் முதல்வராக பதவி வகித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அரசின் பங்காளி...

பலவந்தமாக தக்கவைத்துக்கொள்ளும் எண்ணம் அரசாங்கத்துக்கு கிடையாது என தெரிவித்த பிரதமர், யார் அரசாங்கத்திலிருந்து வெளியேறினாலும் தமது அரசாங்கம் நிலைத்து நிற்குமெனவும் குறிப்பிட்டார்.

பங்காளிக் கட்சிகள் அரசாங்கத்தை விட்டு வெளியேறும் என்று எதிர்க்கட்சிகள் கனவு கண்டுள்ளன. எதிர்க்கட்சிகளில் சிலர் எப்போதும் அரசாங்கத்தின் செயல்பாடுகளைப் பற்றி அவநம்பிக்கை கொண்டுள்ளனர்.

உலக சந்தையில் தற்போதைய சூழ்நிலை காரணமாக பல நாடுகளில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. மேலும் எங்களையும் கடுமையாக பாதிக்கும் இந்த சூழ்நிலையை நாமும் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் தற்போது அரசாங்கத்தின் இடத்தில் செயல்பட்டிருந்தால் நாடு இன்னும் பாதாளத்தை நோக்கி சென்றிருக்கும் எனவும் பிரதமர் மஹிந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொரோனா...

திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 786 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 55 பேரில் 26 பெண்களும் 29 ஆண்களும் உள்ளடங்கின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 10 ஆண்கள், 6 பெண்கள் என 16 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 39 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 19 ஆண்களும், 20 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## திருமலையில்...

யத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக நம்பி அவரது உறவினர்கள் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று விசாரித்தனர்.

அவ்வாறான நடவடிக்கை எவையும் தம்மால் முன்னெடுக்கப்படவில்லை என்று உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இதனை அடுத்து குடும்பத்தாரால் மனித உரிமை ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்தியக் காரியாலயத்தில் முறையிடப்பட்டுள்ளது.

முறையிட்ட பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட அவரது மனைவி மற்றும் தாயார்,

குறித்த நபர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையாகி பல வருடங்களாக சிறு கைத்தொழிலை மேற்கொண்டு வந்ததாகவும் தற்போது அவர் எங்கு இருக்கிறார் என்பது தமக்கு தெரியாத நிலையில் அவரை தேடிக் கண்டுபிடிப்பதற்கு உதவி கோருவதாகவும் கூறினர்.

## இந்திய உயர்...

பிட்டுள்ள போதிலும், கலந்துரையாடப்பட்ட விடயதானங்கள் குறித்து இரு தரப்பும் மேலதிக விபரங்களை வெளியிடவில்லை.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உட்பட அதிகாரிகள் பலரும் இதில் கலந்துகொண்டிருந்தார்கள்.

### யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள்

# அனுமதியின்றி குடிதண்ணீர் விற்பனை சட்ட நடவடிக்கைக்கு தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 29

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி சுத்திகரித்த குடிதண்ணீர் விற்பனை செய்யும் நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்தீபன் "மாநகர சபை எல்லைக்குள் அனுமதி இன்றி சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விற்பனை நிலையங்கள் பல இயங்கி வருகின்றன அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்", என்று கோரி பிரேரணையை சபையில் முன் வைத்தார்.

இதனை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாடு திறக்கப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு திரும்பிய பின்னர் வழக்குகள் தாக்கல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது. (ஐ - 03)



# இந்திய துணை உயர் ஸ்தானிகர் வடமாகாண ஆளுநருடன் பேச்சு

யாழ்ப்பாணம், செப். 29

இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனுக்கும் வடமாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ஸூக்கும் இடையேயான சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் இந்திய திட்டங்கள் மற்றும் வட மாகாணத்தில் இந்திய வளர்ச்சி, ஒத்துழைப்பு வாய்ப்புகள், போக்குவரத்து வசதிகள், விவசாயம், சுகாதாரம் மற்றும் வீடமைப்புத் திட்டங்கள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டது.

# அரசுக்கு எதிராக போராட்டம்; முருத்தெட்டுவே தேரர் தயார்!



கொழும்பு, செப். 29

தேசிய வளங்களை விற்பனை செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் வீதியில் இறங்கி போராடுவோம் என்று அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகள் வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு வழங்கப்படுவது தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"தேசிய வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றை விற்பனை செய்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நான் கடுமையாக எதிர்க்கிறேன். அத் தகைய நடவடிக்கையை ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். கொரோனா தொற்றால் தற்போது வீதியில் இறங்கி போராட முடியவில்லை. வைரஸ் தொற்று கட்டுக்குள் வந்த பின்னர் எமது எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெறும்." - என்றும் தேரர் எச்சரித்தார்.

## நேற்றும் 1,000...

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 15 ஆயிரத்து 524 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 743 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 56 ஆயிரத்து 87 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

# ஹரீன் பெர்னாண்டோ வைத்தியசாலையில்

கொழும்பு, செப். 29

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்பு அவருக்கு நடத்தப்பட்ட இருதய அறுவைச் சிகிச்சையுடன் தொடர்புடைய பிரச்னைகளால் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளாரென தகவல்கள் தெரிவித்தன.

ஹரீன் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளுக்குப் பிறகு, சில மாதங்களுக்கு முன்பு அவருக்கு செய்யப்பட்ட இதய அறுவைச் சிகிச்சையில் சிக்கல்கள் உருவாகியமை தெரியவந்தது.

அவர் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மற்றொரு அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவார் எனக் கூறப்பட்டது.

ஈழநாடு
Eelanadu




# எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை; வீண் அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம்!

## அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

**கொழும்பு, செப். 29**

**நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு இல்லை என்று இணை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**



எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான நிதி அரசிடம் இருக்கின்றது எனவும், இதனால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் எனவும் சந்தேகம் கொள்ளவோ அல்லது வீண் அச்சத்தை ஏற்படுத்திக் கொள்ளவோ தேவையில்லை எனவும் அவர் மேலும் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போது அமுலாக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்ட பின்னர், எரிபொருள் கொள்வனவுக்குத் தேவையான அந்நிய செலாவணி குறைவடைந்துள்ளது என அண்மை யில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய ஒன்றிய குழு மு.காவுடன் முக்கிய பேச்சு!



கொழும்பு, செப். 29

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்டத் தூதுக்குழுவினர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை கட்சியின் "தாருஸ்ஸலாம்" தலைமையகத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதில் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் பங்குபற்றினார்.

முஸ்லிம் சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டது.

# கட்டுமரத்தை கட்ட சென்றவர் ஆற்றில் அடித்து செல்லப்பட்டு பரிதாப மரணம்!

நாவலப்பிட்டி, செப். 29

மஹாவலி கங்கையில் கட்டுமரத்தைக் கட்டுவதற்காகச் சென்ற இரண்டு பிள்ளைகளின் தந்தைய, நீரில் அடித்துச் செல்லப்பட்டு பரிதாகரமாக மரணமடைந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாவலப்பிட்டி, மெதகஹவதுர பிரதேசத்தைச் சேர்ந்த கே.ஜி.திஸ்ஸ (வயது 54) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மெதகஹவதுர பிரதேசத்தில் மஹாவலி கங்கையைக் கடப்பதற்கான பாலமானது உடைந்து விழுந்துள்ளதால், பிரதேச மக்கள் கங்கையைக் கடப்பதற்கு கட்டுமரத்தையே பயன்படுத்தி வந்துள்ளனர்.

இந்நிலையில், நாவலப்பிட்டியில் நீடித்து வரும் சீரற்ற காலநிலை காரணமாக கட்டுமரத்தைக் கயிற்றால் கட்டுவதற்குச் சென்றபோதே, குறித்த நபர் ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்ட இடத்திலிருந்து சுமார் ஒன்றறைக் கிலோமீற்றர் தொலைவில் குறித்த நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# முதலாம் திகதிக்காக காத்திருக்கும் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள்

கொழும்பு, செப். 29

ஒக்ரோபர் முதலாம் திகதி நாடு முழுமையாகத் திறக்கப்படும் என அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் நாடு முழுமையாக திறக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்த உத்தேசித்திருப்பதாக ஆசிரியர், அதிபர்கள் தொழிங்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இம்முறை இடம்பெறவுள்ள போராட்டத்துக்கு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்களினதும் ஆதரவு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

மலர்வு 30 - 05 - 1940

உதிர்வு 25 - 09 - 2021



## சின்னத்தம்பி சிவலிங்கம்

வடமராட்சி அல்வாய் கிழக்கு அத்தாயைப் பிறப்பிடமாகவும், அல்வாய் கிழக்கு பத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவலிங்கம் அவர்கள் கடந்த (25.09.2021) சனிக்கிழமை அன்று சிவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற சின்னையா - பொன்னு தம்பதியரின் அன்பு மருமகனும்,சிவலிங்கம் தெய்வானை அவர்களின் அன்புக் கணவரும், மீனலோஜினி, பகீரதன், விஜிதா (லண்டன்), குமுதினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,கனகரட்டினம், ஜீவா, ஜெயக்குமார் (லண்டன்), சிவராயன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தங்கவேலாயுதம், காலஞ்சென்ற செல்லத்துரை, கருனைப்பிரகாசம், கிருஸ்ணபிள்ளை, சரஸ்வதிஅம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், விதுஷன், நிதுஷன், சர்வின், சஷ்வின், அஷ்வின், ரஷ்வின், ஜெனுஷன், மிதுஷன் (லண்டன்), டக்ஷா, வக்ஷனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.09.2021) வியாழக்கிழமை இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**பகீரதன் - மகன்**
**+447946338860**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# விஷமிகளால் பயிரழிவை சந்தித்த குடும்பத்திற்கு 'டான் ரீ. வி.' உதவி!



யாழ்ப்பாணம், செப். 29

பளையில் விஷமிகளால் பயிர்செய்கை அழிவை சந்தித்த மாற்றுத்திறனாளி குடும்பத்திற்கு டான் தொலைக்காட்சியின் செய்தி பணிப்பாளர் திருமதி மாலினி அஜந்தன் வாழ்வாதார தேவைக்காக நிதியுதவியை வழங்கி வைத்தார்.

பளை - அரசர்கேணி பகுதியில் வாழ்வாதாரத்துக்காக மாற்றுத் திறனாளியின் குடும்பம் ஒன்று மிளகாய் செய்கையில் ஈடுபட்டிருந்தது. அந்த பயிர்கள் காய்த்து அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில், 800 மிளகாய் கன்றுகளை விஷமிகள் சிலர் கடந்த 25ஆம் திகதி ஒரே இரவில்பிடுங்கி எறிந்து அட்டூழியம் புரிந்திருந்தனர்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளியின் வீட்டுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை சென்ற டான் தொலைக் காட்சியின் செய்தி பணிப்பாளர் திருமதி மாலினி அஜந்தன் பிடுங்கி எறியப்பட்ட மிளகாய் செடிகளை பார்வையிட்டார். அத்துடன், அந்தக் குடும்பத்தின் வாழ்வாதாரத் தேவைக்காக ஒரு தொகை நிதி யுதவியை யும் வழங்கி வைத்தார். (ஐ - 03)

# அவசர சிகிச்சை பிரிவுகளில் 83 கொரோனா நோயாளர்கள்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, செப். 29

கொரோனா நோயாளர்களில் தற்போது 83 பேர் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, சிகிச்சை மத்திய நிலையங்களில் 382 நோயாளர்கள் ஒட்சிசனின் உதவியுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று கொரோனா தொடர்பான இணைப்புச் செயலணியின் பணிப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் ஒட்சிசன் தேவையுடைய நோயாளர்களின் எண்ணிக்கை 1,100 ஆக அதிகரித்திருந்தது.

நாட்டில் 275 கொரோனா சிகிச்சை நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மரியான், டிக் டிக் டிக் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ
08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு